Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது சித்திரை 15 ஆம் நாள் துல்கஃதா 22 (28-4-62) சனிக்கிழமை இதழ் 76

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# இலங்கையர்களுக்கு அடையாள கார்டுகள்

## பார்லிமெண்டில் புதிய மசோதா

## இலங்கையரல்லாதவர்க்கு தனி ஜாபிதா தயாராகும்

### 'கோரம்' இன்றி பார்லிமெண்ட் ஒத்திவைப்பு

கொழும்பு, வெள்ளி

இலங்கையர்களுக்கு அடையாளக் கார்டு வழங்கும் புதிய மசோதா வொன்றை பிரதமமந்திரியினதும், பாதுகாப்பு, வெளிவிவகார மந்திரியினதும் பார்லிமெண்டரிக்காரியதரிசி திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ்பண்டாரநாயக்கா இன்றுகாலை ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்தார்.

இப்புதிய மசோதாவின்படி இலங்கையர் ஒவ்வொருவரும் அடையாளக்கார்டுகள் வைத்திருக்கவேண்டும். மூன்று புகைப்படப் பிரதிகள் அனுப்பி இந்த அடையாளக் கார்டுகள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

இப்புதிய மசோதாவின்படி இலங்கையிலுள்ள இலங்கையரல்லாதவர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும்.

வேலை வாய்ப்புக்களால் இலங்கையர்களுக்கு முதலிடம் கிடைக்கவும். இலங்கையரல்லாதார் வேலைபெறுவதைக் கட்டுப்படுத்தவும் இந்த மசோதா வசதிசெய்யுமாம். அடையாளக் கார்டு இல்லாத ஒருவர் வேலைபெற முடியாது என்று தெரிகிறது.

இன்று காலை உதவி சபாநாயகர் தலைமையில் ஜனப் பிரதிநிதிகள் சபை கூடிய போது திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா இந்த மசோதாவைக்கொண்டு வந்தார்.

இதன் பின், சபையின் இன்றைய நிகழ்ச்சிகளின் முதலாவது நிகழ்ச்சியாக கடற்படைச் சட்டத்திருத்த மசோதாவை திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயகா இரண்டாவது தடவையாகக்கொண்டு வந்தார்.

#### சபையில் கோரம் இல்லை

இச் சமயம் சபையில் கோரம் இல்லை என்பதை காங்கேசன்துறை எம். பி. யும் தமிழரசுக் கட்சியின் பார்லிமெண்டரிக் குழுத்தலைவருமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சுட்டிக்காட்டி அதைச் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

சபை அங்கத்தவர்களை அழைக்க மணியடிக்கப்பட்டது. சபையில் மீண்டும் 'கோரம்' ஏற்படும்வரை சபை நடவடிக்கைகளை பத்து நிமிடங்களுக்கு ஒத்திவைக்கலாமென அவிசாவளை எம். பி. யும் எம். ஈ. பி.

(8ம் பக்கம் பார்க்க)

## பெட்ரூல் மண்ணெண்ணை குறைந்த விலையில்விற்கப்படும்

### எண்ணை விநியோகத் திட்டத்தை பிரதமர் ஆரம்பித்துவைப்பார்

கொழும்பு, வெள்ளி

பெட்ரோல், மண் எண்ணை ஆகியவற்றை எண்ணைக் கார்ப்பரேஷன் நாளையிலிருந்துகுறைந்த விலைக்கு விநியோகம் செய்யும்.

எண்ணைக் கார்ப்பரேஷனின் எண்ணை விநியோகத் திட்டத்தை நாளை காலை 9-45க்கு கொலன்னாவையில் பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆரம்பித்து வைப்பார்.

பெற்றோலின் ஒருகலன் விலை இப்பொழுது இருக்கும் விலையைவிட 1 சதத்திலிருந்து 4 சதம்வரை குறைக்கப்படும். மண்எண்ணையின் விலை மூன்றிலிருந்து 11 சதம்வரை குறைக்கப்படும். இந்த விலை குறைப்பு பற்றி தனிப்பட்ட மூன்று எண்ணைக் கம்பனிகளும் எதுவித கருத்தும் இதுவரைதெரிவிக்கவில்லை.

நேற்றிரவு உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரி 108 பெட்ரோல் குதங்களை எடுத்துக்கொள்வதற்கான ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட்டார்.

தனிப்பட்டவர்கள் நடத்தும் பெட்ரோல் குதங்களுக்குச் சொந்தமான நிலம், கட்டடம் உபகரணங்கள் எல்லாவற்றையும் கார்ப்பரேஷன் எடுத்துக் கொள்ளும். கம்பனிகளால் நடத்தப்படும் குதங்களில் உள்ள உபகரணங்களை மட்டுமே இப்பொழுதுகார்ப்பரேஷன் எடுத்துக்கொள்ளும். இந்த நடவடிக்கைக்கு யாரும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையென கார்ப்பரேஷனின், ஜெனரல் மனேஜர் தெரிவித்துள்ளார்.

### தமிழ்நாட்டில் அணுசக்தி நிலையங்கள்

சென்னை, ஏப். 27

தமிழ் நாட்டில் மகாவலிபுரத்துக்கு அருகிலும் சேலம் மாவட்டத்திலும் அணு சக்தி நிலையங்களை நிறுவுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மேனன் பயணமானார்

புதுடில்லி, ஏப். 27

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் காஷ்மீர் பிரச்னை பற்றி நடைபெறவிருக்கும் விவாதத்தில் கலந்துகொள்வதற்காக இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் இன்று நியுயோர்க்கிற்குப் பயணமானர்.

## தமிழரசுக்கட்சியின் மேதினக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கைத் தமிழரசுக்கட்சி இவ்வாண்டு மேதினத்தை மட்டக்களப்பில் பிரமாண்டமான முறையில் கொண்டாடவிருப்பதாகத்தெரிகிறது.

கடந்த வருடங்களைப் போன்று இவ்வாண்டு மேதினக்கொண்டாட்டத்தை யாழ்ப்பாணத்தில் கொண்டாட மாட்டாதெனவும்தெரிகிறது.

யாழ்ப்பாணம் கத்தோலிக்க மக்கள் மே தினத்தை விரிந்த முறையில் கொண்டாடுவதென முடிவுசெய்திருக்கிறார்கள். காலையில் சென் பட்ரிக்ஸ் கதீட்ரரில் பாடல் பூசையும் மத்தியானம் பிரசங்கமும் நடைபெறும். மாலையில் பாஷையூரிலிருந்து பிரமாண்டமானதோர் கத்தோலிக்க மக்கள் ஊர்வலம் கடற்கரை வீதிவழியாக கடற்கரை மைதானத்தை வந்தடையும். அங்கு அவர்கள் மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

யாழ்ப்பாணம் குமாஸ்தாக்கள் கூட்டு மே தினக்கூட்டத்தில் பொதுக்குமாஸ்தாக்கள் சங்கத் தலைவர் திரு. டி. பி. திசநாயக்காவும் கலந்துகொள்ளுகிறாரெனத்தெரிகிறது.

அன்று நடைபெறும் ஊர்வலத்தில் யாழ்ப்பாண வாத்தக ஊழியர் சங்கமும் கலந்து கொள்ளுகிறது.

## போர் பிரசார தடை அமெரிக்கா விரும்பவில்லையாம்

ஜெனிவா, ஏப். 27

யுத்தப் பிரசாரத்துக்கு முற்றுப் புள்ளி வைக்கும் செயல் முறைப் பிரகடனமொன்றை வெளியிடுவதற்குத் தாமும் அமெரிக்கப் பிரதிநிதி திரு. ஆர்தர் டீனும் தனிப்பட்ட முறையில் எடுத்த முயற்சி தோல்வியடைந்து விட்டது என்று சோவியத் பிரதிநிதி திரு. ஸோரின் இன்று அறிவித்தார்.

யுத்தப் பிரசார முறையை நிறுத்துவதற்கு அமெரிக்கா விரும்பவில்லை யென்றும் இது சம்பந்தமான செயல் முறைப் பிரகடனமொன்றை வெளியிட அமெரிக்கா இணங்கவில்லை யென்றும் திரு. ஸோரின் தெரிவித்தார்.

## "சிங்களம் படிக்கும்படி தமிழாசிரியரை நிர்ப்பந்திக்கக்கூடாது"

### தமிழ்த் தராதரப்பத்திர ஆசிரியர் சங்கத்தில் வரும் பிரேரணை

யாழ்ப்பாணம், சனி

ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்த காலத்தில் தமிழ் ஆசிரியர்களுக்கு இருந்த மொழியுரிமை தொடர்ந்தும் இருக்கவேண்டும், சிங்களம் படிக்கும்படி நிர்ப்பந்திக்கக் கூடாதென அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணையொன்று அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழ்த் தராதரப் பத்திர ஆசிரிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருக்கிறது.

இந்த வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 29-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் வரவிருக்கும் மற்றும் சிலபிரேரணையின் விபரம் வருமாறு:-

ஆசிரியர்களின் இடமாற்றம், பதவி உயர்வு வித்தியாதரிசியினரால் தயாரிக்கப்பட்டபின்

(8ம் பக்கம் பார்க்க)

# இன்று உங்கள் பலன்

-சோதிட ஆசான்செ. தெல்லியூர்-

சுபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 15-ந் நாள் சனிக்கிழமை (28-4-62) ஹிஜ்ரி வருடம் 1381, துல்கஃதா 22-ம் பிறை.

இன்று பின்னிரவு 12-08 வரை நவமி பின்னர் தசமி. பகல் 8-05 வரை திருவோணம். பின்னர் அவிட்டம். மரணயோகம் 5-18 வரை இன்று கரிநாள். இராகுகாலம் 8-58 முதல் 10-28 வரை.

அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்தராடம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சிநாளாகையால் இவர்கள் சுபகருமங்களை மேற்கொள்ளலாகாது.

## இராசிப்பலன்

திருவோணம்—அவிட்டம்: இன்று இவர்களுக்கு தேகாரோக்கிய அபிவிருத்தி, குடும்ப நிம்மதி, கடும் உழைப்பு, சுகப் பலன் ஆகியன காணப்படுகின்றன.

மேடம்: (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்முடிய) புதியனதோல்வி, ஊழியர் உதவி, பண வரவு, கடும் உழைப்பு, நல்லோர் சேர்க்கை.

இடபம்: (கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய) தொழில்ஊக்கம், கீர்த்தி, புத்திசாதுரியம், கடும் உழைப்பு, சமுதாய மதிப்பு, வித்தைச் சிறப்பு.

மிதுனம்: (மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புனர்பூசம் முன்முக்கால் முடிய) உழைப்புக்கேற்ற பலிதம் இன்மை, பணநின்மை திருப்தி, பகை நீக்கம், சுபசெய்தி கேட்டல்.

கடகம்:(புனர்பூசம் 4ம்பாதம், பூசம், ஆயிலியம் முடிய)குடும்ப சுகக்குறைவு, நிம்மதியீனம், வைதியச் செலவு, பணமுடை, பிற்பகுதியில் நிம்மதி.

சிங்கம்: (மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம் முடிய) உறவினர்—நண்பர் கொண்டாட்டம், ஆடம்பரச் செலவு, நண்பர்-முதியோர் உதவி, தொழிலபிவிருத்தி.

கன்னி: (உத்தரம் பின்முக்கால், அத்தம், சித்தரை முடிய) பெண்களால் நன்மை, குடும்பத்தில் சந்தோஷம், பிரயாணம், உடல்நலக்குறைவு.

துலாம்: (சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால் முடிய) தெய்வ வழிபாடு, தருமவழி பணச்செலவு, நல்லோர் நட்பு, செய்காரிய தடை, பகை நீக்கம்.

விருச்சிகம்: (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை) தொழில் விருத்தி, மதிப்புயர்ச்சி, கடும் உழைப்பு, ஊழியர் உதவி, சமாதான வாழ்வு, சுபகரும வெற்றி.

தனு: (மூலம், பூராடம்,உத்தராடம் 1ம்பாதம்முடிய) சனவிரோதம், குடும்பத்தில் ஒற்றுமை, தொழில் விருத்தி, பணவரவு, தாயாதிகளால் கஷ்டம், பிற்பகுதியில் பணச்செலவு.

மகரம்: (உத்தராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய) தேகாரோக்கியம், குடும்ப சந்தோஷம், கடன் வரவு. தடைபட்ட தொழில் விருத்தி, நண்பர் உதவி.

கும்பம்: (அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் முடிய) பெரியவர்கள் ஆதரவு, தெய்வவழிபாடு, தருமசிந்தனை, தேகாரோக்கியம், போசன சுகம்.

மீனம்: (பூரட்டாதி4ம்பாதம், உத்திரட்டாதி, ரேவதி முடிய) குடும்பத்தில் கஷ்டம், பணமுடை, வைத்தியச் செலவு, மன உறுதி, ஆரோக்கியம் பிற்பகுதியில் விருத்தியாதல், தொழில் முயற்சிவிருத்தி.

## 29-4-62

சுபகிருது ஆண்டு சித்திரை திங்கள் 16-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (29-4-62) ஹிஜ்ரி வருடம் 1381, துல்கஃதா 23-ம் பிறை.

இன்று இரவு 9-18 வரை தசமி. அதன்பின்னர் ஏகாதசி. காலை 6-39 வரை அவிட்டம். பின்னிரவு 5-03 வரை சதயம். அதன்பின்னர் பூரட்டாதி. மரணயோகம். இராகுகாலம் 4-28 முதல் 5-58வரை. இன்று திருநாவுக்கரசுநாயனார் குருபூசை.

உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம் ஆகிய நட்சத்திரங்களுக்கு இன்று படுபட்சி நாளாகையால் இவர்கள் சுபகருமங்களை மேற்கொள்ளுதலாகாது.

## இராசிப்பலன்

அவிட்டம்—சதயம்: இன்று இவர்களுக்கு சுபகருமச்செய்தி, பணஆதாயம், செல்வாக்கு அபிவிருத்தி, அவசர புத்தியால் பகை ஆகியன காணப்படுகின்றன.

மேடம்: (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம் முடிய) இனசன ஆதரவு, குடும்ப சௌக்கியம், பணவரவு, பிரயாணம், நல்லோர் சந்திப்பு, சுபயோசனைகள்.

இடபம்: (கார்த்திகை பின்முககால், ரோகிணி, மிருகசீரிடம் முன்னரை முடிய) பிரயாணகஷ்டம், நண்பரால் ஏமாற்றம், கடன் படல், மேலோர் உதவி, பிதுருவழி சிந்தனை.

மிதுனம்: (மிருகசீரிடம் பின்னரை, திருவாதிரை, புநர்பூசம் முன்முக்கால் முடிய) மாதாவழி உதவி, சொத்துக்களுக்காக தாயாதிகளால் கலகம், வீண்பகை.

கடகம்: (புநர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்முடிய) போசனசுகம், குடும்பச்சிறப்பு, வர்த்தகச்சிறப்பு, நல்லோர் தரிசனம், கடும்உழைப்பு.

சிங்கம்: (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம் முடிய) ஊழியர்— பணியாட்களாதரவு, தொழில்விருத்தி, திடமனம், அவசரப் பேச்சால் வீண் பகை, வாக்குவன்மை, பண வரவு.

கன்னி:(உத்தரம்பின்முக்கால் அத்தம், சித்திரைமுன்னரை முடிய) வாக்குச் சாதுரியம், கடன்வரவு, குடும்பசுகம், நீசர் தொடர்பால் மதிப்புக் குறைதல், பணச்செலவு, வர்த்தக லாபம்.

துலாம்: (சித்திரை பின்னரை, சுவாதி, விசாகம் முன்முக்கால் முடிய) கடன் வரவு, வீண்வாக்குவாதம், இனசனப்பகை, அனாவசிய அபவாதம், பிற்பகுதியில் குடும்ப ஒற்றுமை, சுபகரும பேச்சு.

விருச்சிகம்: (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய) இனசன ஒற்றுமை, குடும்பநிம்மதி, வித்தைச் சிறப்பு, பணவரவு, மதிப்புயர்ச்சி.

தனு: (மேடம், பூராடம், உத்தராடம்முதற்பாதம்முடிய) தொழிற்சிறப்பு, நாணயம், ஆதாயப் பெருக்கம், குடும்பத்தில் சச்சரவு, தெய்வவழிபாடு.

மகரம்: (உத்தராடம் பின்முக்கால், திருவோணம், அவிட்டம் முன்னரை முடிய) குடும்பசுகம், தைரியம், சுபசெய்தி, பணவரவு, அவசரப் பேச்சால் வீண் அபவாதம், தேகாரோக்கியம்.

கும்பம்: (அவிட்டம் பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால் முடிய) போசன சுகம், நாணயவிருத்தி, மதிப்பு, உத்தியோகச் சிறப்பு, குடும்ப நிம்மதி.

மீனம்: (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய) மேலோர் ஆதரவு, பதவிச்சிறப்பு, பணவரவு, நல்லவர் தொடர்பு, முயற்சி வெற்றி, தொழிற்சிறப்பு. கடும் உழைப்பு.


## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50 தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர். கைலாயபிள்ளையார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

நன்கு ஸ்தாபிக்கப்பட்ட அலுமினியம் தொழிற்சாலையொன்றில் ஸ்பின்னர்கள், பொலிஷர்கள், அப்பிறென்டிஸ்களுக்குப் பயிற்சி பெறுபவர்களுக்கான காலி ஸ்தானங்கள் இருக்கின்றன. விருப்பமுடையவர்கள் வயதையும், அனுபவத்தையும் கூறி கீழ்வரும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்: பெட்டி எண். Y M 351 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

### தேவை

சினிற்ரேன்ஸ் லிமிட்டெட் பேசும்பட விநியோகஸ்தாபனத்திற்கு பொருளாளர், இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கு ஆங்கில ஜே.எஸ்.சி.க்குக்குறைவில்லாத கல்வித்தகைமையும், தட்டெழுத்துப் பயிற்சியும், முதலீடும், 3000 ரூபா ரொக்கப் பிணையுஞ் செலுத்தக்கூடியவர்கள் விண்ணப்பிக்க. முடிவு திகதி 6-5-62. முகவரி: இன்ரநாஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட், இராசா கட்டிடம், பெரியகடை, யாழ்ப்பாணம்.


## வித்துவான் பாராட்டு விழாவுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், வெள்ளி

"சைவமும் தமிழும் தழைத்தோங்க தம்மையே தியாகம் செய்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். அவர்கள் சைவத் தமிழ்ப் பரம்பரையை வளர்ந்தோங்க வேண்டுமென ஆவல் கொண்டிருந்தார். அப்பெருமான் சிதம்பரத்தில் நிறுவிய வித்தியாசாலையில் கற்று மிக்க புலமையடைந்து அப்பாடசாலையில் முதல் மாணக்கராக விளங்கியவர் வித்துவான் ந. சுப்பையா பிள்ளை. இவர் தமது கல்வித் திறமையால் நாவலர் தரும நன்கொடை பெற்றுப் படித்துப் பட்டம் பெற்றவர். இன்று நாவலர் சிஷ்ய பரம்பரையினர்களுள் சிறந்த தமிழறிஞருள் ஒருவராக விளங்கிக்கொண்டிருப்பவருமாவர்."

இவ்வாறு பண்டிதமணி. வித்துவான் ந. சுப்பையாபிள்ளையின் பாராட்டு விழாச்சபை விடுத்துள்ள வேண்டுகோள் பத்திரத்தில் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

அவ்வேண்டுகோளில் மேலும் கூறியிருப்பதாவது:-

40 வருட காலமாக ஆசிரியத் தொண்டு செய்துள்ளார். பற்பல கலாசாலைகளல் பேராசானகக் கடமையாற்றியதுடன் 25 ஆண்டுகளாக வண்ணை நாவலர் வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராக இருந்து அரும்பணி செய்துள்ளார். வித்துவான் அவர்கள் பல நூல்களில் சிறந்த உரை ஆசிரியராகவும் மிளிர்கின்றார். அவர் இன்றும் அநேக தொண்டுகள் செய்வதற்கு நாம் ஊக்கமளிக்க வேண்டியதும் அவசியமாகும்.

ஆகவே அவர் சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கவேண்டியது தமிழ்மக்கள் கடமையாகும். இவர் செய்து வைத்திருக்கும் நன்னூல் விருத்தியுரை, யாப்பருங்கல விருத்தி முதலிய நூல்களை அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டியதும் அவசியமாகும்.

வித்துவான் அவர்களுக்கு அண்மையில் பொற்கிழி வழங்கிக் கௌரவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்படி சபையினர் செய்துவருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# பெட்டிக்குள் வைக்காமல் சடலத்தைபுதைக்கமுயற்சி

தங்காலை, வெள்ளி

உரிமை கோரப் பெருத இறந்த நோயாளி ஒருவரின் (பெண்) சடலத்தை, பிரேதப் பெட்டிக்குள் வைக்காமல், புதைக்க எத்தனித்த சம்பவமொன்று இங்கு நிகழ்ந்துள்ளது.

தங்காலை ஆஸ்பத்திரியில் மரணமான நோயாளி ஒருவரின் சடலத்தை, ஆஸ்பத்திரியைச் சேர்ந்த இரு தொழிலாளர்கள் பிரேதப் பெட்டிககுள் வைக்காமல் புதைப்பதற்காக ஆஸ்பத்திரி கரத்தையொன்றில் சவச்சாலைக்கு எடுத்துச் சென்றனர். எதிர் பாராத விதமாக அன்று, அதே சவச்சாலைக்கு வேறு ஒருவரின் மரணச் சடங்குகளுக்காக பலர் வந்திருந்தனர். நகர சபையின் உப தலைவரும் அங்கிருந்தார்.

ஆஸ்பத்திரி கரத்தையிலுள்ள சடலம், பிரேதப் பெட்டிக்குள்ளில்லாது வெறுமனே புதைக்கக்கொண்டுவரப்பட்டதைக் கண்ட உப தலைவர், தொழிலாளர் இருவரிடம் பிரேதத்தை அடக்கம் செய்ய வேண்டாமென்றும் பிரேதப்

(6-ம் பக்ம் பார்க்க)

## சமஸ்கிருதபரீட்சையில் தேறிய இலங்கை மாணவர்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்னை அமரபாரதி பரீக்ஷா ஸமிதியினால் சென்ற மாசிமாதத்தில் நடத்தப்பட்ட சமஸ்கிருதப் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளிவந்திருக்கின்றன. இந்து தர்மத்தையும் சமஸ்கிருத மொழியையும் பரப்புவதற்காகக் காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளின் ஆசியுடன் நடத்தப்படுகின்ற அமரபாரதி பரீக்ஷா ஸமிதியின் ஏழு பரீட்சைகளில் மூன்று பரீட்சைகள் முதன் முதலாக இவ்வாண்டில் சமஸ்கிருத விஸ்வ பரிஷத்தின் புத்தூர்க் கேந்திரத்தினால் புத்தூர், வண்ணார் பண்ணை, சுன்னாகம், ஆகிய மூன்றிடங்களில் நடாத்தப்பட்டன.

இங்கு பிராதமிகாவில் 19 பரீட்சார்த்திகளும், மத்யமாவில் 9 பரீட்சார்த்திகளும், சமர்த்தாவில் இருவருமாக மொத்தம் முப்பது பரீக்ஷார்த்திகள் சித்திபெற்றிருக்கிறார்கள். இவர்களுள், பிராதமிகா பரீட்சையில் முதற்பிரிவில் மிக உயர்ந்த புள்ளிபெற்ற செல்வி செ. சரோஜினிதேவி என்னும் கரவெட்டி வாணிகலைக் கழக மாணவி ஒரு தங்கப் பதக்கத்தையும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி மாணவியான செல்வி க. சிவநேசம் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பரிசாகப் பெறுகிறார்கள். மத்யமா பரீட்சையில் முதற் பிரிவில் முதலிடம் பெற்றமைக்காக இராமநாதன் கல்லூரி மாணவி செல்வி பொ. புனிதவதி வெள்ளிப்பதக்கப் பரிசு பெறுகிறார். இதே பரீட்சையில் முதற் பிரிவில் தேறிய செல்வி வை. யோகேஸ்வரி என்னும் யாழ். மத்திய கல்லூரி மாணவி பாராட்டுக்குரியவராகிறார். மூவரும் புத்தகப் பரிசில்களும் பெறுவதோடு சித்திபெற்ற அனைவருக்கும் தகுதிப் பத்திரங்களும் வழங்கப்படுமென்று தெரிகிறது.

சித்தியெய்தியவர்களின் விபரம் வருமாறு:-

### பிராதமிகா

முதலாம்பிரிவு:- செ. சரோஜினி தேவி (தங்கப் பதக்கம் பரிசு), க. சிவநேசம் (வெள்ளிப் பதக்கப் பரிசு), ப. அருணசலம், ப. நித்தியான்ந்த சர்மா, இ. பரமகுரு, த. நல்லநாயகி, பா. குமாரஸ்வாமி சர்மா.

இரண்டாம் பிரிவு: சு. ஸ்ரீதர சர்மா, ச. ஸ்கந்தராஜ சர்மா, வை. பாஸ்கர சர்மா, சி. க. நடராஜா, இ: புவனம்.

மூன்ரும் பிரிவு: ஆ கமலநாதன், பு. கண்ணபிரான், கா. நாகேந்திரன், கு. நித்தியானந்த சர்மா, சி. இளையதம்பி, க கிருஷ்ணசாமி, இ. ஜயகுணரத்தினம்.

### மத்யமா

முதலாம் பிரிவு: பொ. புனிதவதி (வெள்ளிப்பதக்கம் பரிசு), வை. யோகேஸ்வரி (பரிசு), ச. மகேஸ்வரன், வே. ஷண்முகலிங்கம், வே. திலகவதி.

இரண்டாம்பிரிவு: சி. தியாகராஜ சர்மா, சி. நாகேஸ்வர சர்மா, செ. மனோரஞ்சிதம்.

மூன்ரும் பிரிவு: த. சகாதேவன்.

### ஸமர்த்தா

மூன்ரும் பிரிவு: ஆ. சபாரத்தினம், க. ஜெயதேவி.

இப்பரீட்சைகளில் கரவெட்டி வாணி கலைக்கழகம், யாழ். மத்திய கல்லூரி, கரவெட்டி அரசினர் பாடசாலை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி, நீர்வேலி வேதாகம பாடசாலை, சுன்னாகம் வேதாகம பாடசாலை என்பவற்றின் மாணவர் பங்குபற்றினர்கள்.

## கதம்பவிழாப் போட்டி

சாவகச்சேரி, வெள்ளி

சங்கத்தானை இந்துக்கல்லூரியில் நடைபெற்ற தென்மராட்சிப்பகுதிப் பாடசாலைகளின் கதம்பவிழாப் போட்டியில் பின்வரும் பாடசாலைகள் வெற்றி பெற்றுள்ளன:—

அபிநயப் பாட்டு:-

1. சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம். 2. மீசாலை விக்கினேஸ்வர வித்தியாசாலை. 3. கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை.

கிராமியப் பாட்டு:-

1. கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தவித்தியாசாலை. 2 சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி. 3. மீசாலை விக்கினேஸ்வர வித்தியாசாலை.

கர்நாடக சங்கீதம்:-

1. கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை.

கிராமிய நடனம்:-

1. சாவகச்சேரி அரசினர் மகளிர் கல்லூரி.

நாடகம்:-

1. சாவகச்சேரி அரசினர் மகளிர் கல்லூரி. 2. மீசாலை விக்கினேஸ்வர வித்தியாசாலை. 3. மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை..

## பீரிஸ் மரணம்

### 4வது நபருக்கு றிமாண்ட்

கொழும்பு, வெள்ளி.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வாக்ஸ்ஹல் வீதியிலுள்ள மெசர்ஸ் ஜேம்ஸ பின்லே என்ற பிரபல தேயிலை விற்பனையாளர்களின் ஸ்டோர்ஸ் படிகளில் குரல்வளை திருகிக் கொல்லப்பட்டுக் கிடந்த பீ. பி. பீரிஸின் மரணம் குறித்து நான்காவது சந்தேகப்பேர்வழியான பி. சந்திரதாசா (வயது 30) என்பவரை மே மாதம் 7-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி கோட்டை மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்

சந்தேகிக்கப்பட்ட மற்றும் மூவரும் மே மாதம் 7-ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

பீரிஸின் மரணச் சடங்குகளையும், செலவுகளையும் இலங்கை வர்த்தக யூனியன் சம்மேளனம் பொறுப்பேற்றுள்ளதாகத் தெரியவருகிறது

மேதின விழாவில் கலந்து கொள்ளும் பொருட்டு திரு. பீரிஸ் நேற்று வட கொரியாவுக்கு புறப்பட இருந்தார்.

# அமெரிக்க சோதனைக்கு கடும் எதிர்ப்பு

## லண்டனிலும் டோக்கியோவிலும் ஆர்ப்பாட்டங்கள்

லண்டன், ஏப். 27

**அமெரிக்கா, மீண்டும் அணு சோதனையை ஆரம்பித்தது குறித்து பலவிடங்களில் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. ஜெனிவா மகாநாட்டில் நடுநிலைமை நாடுகளின் பிரதிநிதிகளும், கிழக்கு ஐரோப்பிய பிரதிநிதிகளும் அமெரிக்காவின் செயல் பற்றி வருத்தமும், கண்டனமும் தெரிவித்தனர்.**

இந்தியப் பிரதிநிதி திரு. ஆர்தர் லால் பேசுகையில், புதிய சோதனையினால் ஏற்பட்ட விரும்பத்தகாத நிழலின் கீழ் மகாநாடு நடைபெறுகிறதென்றும், மகாநாட்டு ஆரம்பத்தின் போது ரஷ்யா நடத்திய அணு சோதனைக்கு எவ்விதம் முகாந்திரம் கிடையாதோ அதே போல், இப்போது அமெரிக்க சோதனைக்கும் முகாந்திரம் கிடையாது என்றும் கூறினர். இது வருத்தமளிக்கக் கூடிய விஷயமென்றும் அவர் கூறினர். அமெரிக்க பிரதிநிதி ஸோரின் பேசுகையில் ரஷ்யா, இந்த நிலைமையைப் பார்த்துக் கொண்டு மௌனமாய் இருக்க முடியாதென்றும், அது தனது பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறினர். அமெரிக்கப் பிரதிநிதி பேசுகையில், அணு சோதனை விஷயத்தில் உருவான இணக்கம் ஏற்பட்டதால்தான் தாங்கள் இச்சோதனையை நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது எனக் கூறினர்.

**மூவர் கமிட்டி ஒத்திவைப்பு**

இதற்கிடையில், நேற்றுக் கூடிய அணு சோதனைத் தடை பற்றிய மூவல்லரசுக் கமிட்டி தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது. அமெரிக்காவின் தீர்மானம் நியாயமானது என்றும், அணு சோதனைத் தடை பற்றிய ஒப்பந்தம் ஏற்படாதவரை அமெரிக்கா சோதனை நடத்தியே தீரும் என்றும் யு. எஸ். வெளிநாட்டு மந்திரி திரு. டீன் ரஸ்க் கூறினர்.

லண்டனிலும், டோக்கியோவிலும் அமெரிக்க தூதராலயங்களுக்குமுன் அணு சோதனை எதிர்ப்பாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஜப்பானிய அரசாங்கம் அமெரிக்காவுக்கு கடும் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

**மேனன்**

அமெரிக்கா அணு சோதனையை ஆரம்பித்தது எல்லோருக்கும் வருத்தத்தை அளிக்கிறது என இந்தியப் பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் கூறினர். இந்த அணுப் போட்டியினல் பேரே மூண்டுவிடக் கூடுமென்றும் அவர் கூறினர். ஆயினும் ஜெனிவாவில் அணு சோதனையைத் தடுப்பதற்கு வழி கண்டு பிடிக்கப்படும் என நம்புவதாயும் மேனன் கூறினர்.

## உலகவலம்

**லீக்**

நாட்டில் ஒற்றுமையைக் குலைக்கும் சக்திகளுக்கெதிராய் போராடுவதென அகில இந்திய முஸ்லிம் லீக் தீர்மானித்திருக்கிறது.

**மால்டா**

மேற்கு வங்காளத்திலுள்ள மால்டாவில் நிலைமை இப்போது அமைதியாய் இருப்பதாயும், ஊரடங்குச்சட்டம் அங்கு மேலும் தளர்த்தப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

**பம்பாய் துறைமுகம்**

பம்பாய் துறைமுகத்தை நவீன முறையில் அபிவிருத்தி செய்ய உலக வங்கி கடன் அளிக்கும் என அறிவிக்கப்பட்டது.

**மேல்சபை உபதலைவர்**

சென்னை மேல்சபையின் உபதலைவராக திரு. வி. கே. பழனிசாமிக்கவுண்டர் தெரிவு செய்யப்பட்டார்.

**மலையேறும் கழகம்**

எவரெஸ்டில் ஏறும் செலவிற்காக பாரத மலையேறும் கழகத்திற்கு 5 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது.

**அரசியல் கைதிகள்**

நீண்ட கால அரசியல் கைதிகள் 12 பேரை தமிழ் நாடு அரசாங்கம் விடுதலை செய்ததை கம்யூனிஸ்ட்கட்சி வரவேற்றுள்ளது. இதர ராஜ்யங்களும் இந்த உதாரணத்தைப் பின்பற்ற வேண்டுமென அது கேட்டுக் கொண்டது.

## "அகில இலங்கை எழுத்தாளர் மன்றம்"

### அமைக்குமாறு தீவுப்பகுதி எழுத்தாளர் அமைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஈழத்தின் பலபாகங்களிலும் பரந்து வாழும் தீவு பகுதி எழுத்தாளர்களை ஒன்று சேர்த்து ஒரு கட்டுக் கோப்பான ஸ்தாபனத்தின் மூலம் அவர்களது ஆக்க முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதற்றாகத் 'தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கம்' ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இச் சங்கத்தின் 'அமைப்புக் கூட்டம்' நேற்று மாலை வேலணைக் கிராம சபை மண்டபத்தில் திரு. செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

எழுத்துலகில் நாம் வளர்ச்சி பெறவேண்டுமானல் தீவிப் பகுதி எழுத்தாளரிடையே சங்கம் ஒன்று அமைத்தல் அவசியமானது எனத் தலைவர் திரு. செ. சுப்பிரமணியம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதைத் தொடர்ந்து, "கூட்ட அமைப்பாளர்' கவிஞர் தில்லைச்சிவன்' தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கத்தின் நோக்கம் பற்றியும் அதன் ஆக்க வேலைகள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். சங்கம் அமைக்கப்பட வேண்டும் என்ற அவரது தீர்மானத்தைச் சபையோர் ஏகமனதாக அங்கீகரித்தனர்.

சபை அங்கத்தவர்களிடையே "கலந்துரையாடல்" நடைபெற்ற போது ஆண்டு மலர், சிறுகதை, கவிதைத் தொகுதிகள் வெளியிடு செய்தல் பாடசாலை மாணவர்களிடையே, பெரியோர்கள் நினைவாகக் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துதல், மாதந்தோறும் கருத்தரங்கம்' நடத்துதல் எனத் தீர்மானிக்கப்பட்டன.

பின்வருபவர்கள் சங்கத்தின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்:— திரு. குலசபாநாதன், திரு. கா. பொ. இரத்தினம் திரு. சே. சிவபாதசுந்தரம்.

தலைவர்:- திரு. தில்லைச்சிவன், உப-தலைவர்கள்:- திரு. மு. தளையசிங்கம், திரு. அமுது, திரு. டேவிட்ராசா, திரு. தி. பஞ்சாட்சரம், திரு. நாவேந்தன், செயலாளர்:- திரு. இரா—சிவசந்திரன், துணைச் செயலாளர்:- திரு. முகிலன், பொருளாளர்:— திரு. மு. பொன்னம்பலம் (தீவான்), செயற்குழு அங்கத்தவர்கள்:- திரு. இமையவன், திரு. ஆறுமாறன் திரு. இளவழகன்.

திரு. முகிலன் இளம் எழுத்தாளர்களைச் சபையோருக்கு "அறிமுகம்" செய்துவைத்துப் பேசினர்.

"அகில இலங்கையிலும் உள்ள எழுத்தாளர் சங்கங்களை இணைத்து'அகில இலங்கை எழுத்தாளர் மா மன்றம்' என்னும் ஓர் பொது ஸ்தாபனத்தை உருவாக்குவதற்கு கொழும்பு அகில இலங்கை தமிழ் எழுத்தாளர் மகாநாடு" வழி செய்ய வேண்டுமென இச்சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது" என்ற தீர்மானம் இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

## அமெரிக்க செய்மதி சந்திரனில்நொறுங்கியது

கேப்கனவரேஸ், ஏப். 27

"ரேஞ்சர் 4" என்ற அமெரிக்க கிரகம் சந்திரனின் மறுபுறத்தில் நொறுங்கிவிட்டதாக விஞ்ஞானிகள் இப்போதுகருதுகின்றனர். (1959-ம் ஆண்டு ரஷ்யா இருதடவைகள் சந்திரனுக்கனுப்பிய கிரகங்கள் வெற்றியடைந்தன.

ரஷ்யா "காஷ்மோஸ் 4" என்ற 4 வது ஸ்புட்னிக்கை நேற்று வானவெளிக்கனுப்பியது. பூமியிலிருந்து 186 மைலுக்கும் 206 மைலுக்கு மிடையே அது பூமியைச் சுற்றி வருவதாக அறிவிக்கப்படுகிறது. நேற்றிரவு அது புதுடில்லிக்கு மேலும், பின் வாஷிங்டனுக்கு மேலும் சென்றது.

ஆங்கிலோ- அமெரிக்கக் கூட்டுமுயற்சியின்மூலம் உருவாக்கப்பட்ட சர்வதேச செய்மதி வெற்றிகரமாக வானவெளிக்கு அனுப்பப்பட்டதாய் அறிவிக்கப்படுகிறது.

## பிரிட்டிஷ் ஏற்றுமதிகள் பெரும் மதிப்பு

லன்டன், ஏப்ரல் 27

பிரிட்டிஷ் வர்த்தக சபையால் பிரசுரிக்கப்பட்ட பிரசாரத்தின்படி பிரிட்டிஷ் ஏற்றுமதிபெப்ரவரியில் 298, 200,000 பவுண்களிலிருந்து மார்ச்சில் 322, 400, 000 பவுன்கள் கூடியது. இறக்குமதி 333, 000,000 பவுன்களிலிருந்து 389,700,000 பவுன்களாயின. திரும்பி ஏற்றுமதியில் 10, 900, 000 பவுண்டிலிருந்து 14, 900, 000 பவுன்களாகக் கூடியது.

அமெரிக்காவிற்கு பிரிட்டிஷ்கார் ஏற்றுமதியின் தொகை

## மட்டக்களப்பு-யாழ்ப்பாணம் விமானசேவை

### மேதினத்தன்று ஆரம்பம்

கொழும்பு, வெள்ளி

மட்டக்களப்பு - யாழ்ப்பாணத்துக்கான ஏயர் சிலோனின் விமானச்சேவைகள் மேதினத்தன்று ஆரம்பமாகும்.

இது சம்பந்தமாக ஏயர் சிலோன் அதிகாரியொருவர் நேற்றுத் தெரிவிக்கையில், வாரந்தோறும் இரண்டுசேவைகள் இருக்குமென்றும், இச் சேவைகள் புதன்கிழமை, சனிக்கிழமை ஆகிய இருநாட்களிலும் நடைபெறுமென்றும் கூறினர்.

இவ்விருநாட்களிலும், மட்டக்களப்பிலிருந்து காலை எட்டு மணிக்குப் புறப்படும் விமானம் காலை 9-20க்கு யாழ்ப்பாணம் வந்தடையும். பின்னர் யாழ்ப்பாணமிருந்து பகல் 1-30க்குப் புறப்படும் விமானம் பிற்பகல் 2-50க்கு மட்டக்களப்பு போய்ச்சேரும்.

1961- ம் ஆண்டின் முதற்பகுதியில் ஏழுமடங்காகக் கூடியுள்ளதென்று மோட்டோர் உற்பத்தியாளர், வர்த்தகர்கள் சங்கத்தின் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## கருவாடு விற்க மறுத்தார் ரூ. 150 அபராதம்

கம்பஹா, வெள்ளி

மகலங்கமுவ என்ற இடத்தைச் சேர்ந்த எஸ். ரொபர்ட் ரேசா என்ற வர்த்தகர் அரை றுத்தல் கருவாடு விற்க மறுத்ததாக நீர்கொழும்பு விலை உணவுக் கட்டுப்பாடு இன்ஸ்பெக்டர் திரு. எஸ். பி. அபயவர்தனவினல் குற்றம் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கு சர்க்கியூட் கோர்ட் மாஜிஸ்திரேட் திரு. மகேசரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. குற்றத்தை ஒப்புக்கொண்ட வர்த்தகருக்கு, மாஜிஸ்திரேட் ரூ. 150 அபராதம் விதித்தார்.

## மத்தியமாகாண நாடகப் போட்டி

கண்டி, வெள்ளி

மத்திய மகாணத்திலுள்ள மகாவித்தியாசாலைகள், மத்திய மகாவித்தியாசாலைகளுக் கிடையே நாடகப் போட்டியொன்றை நடத்த கண்டி கலாகவயா முடிவுசெய்துள்ளது. நாடகப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப்பெறும் பாடசாலைகளுக்கு ரூ. 500, ரூ. 300, ரூ. 200 பரிசுப் பணமாகக் கொடுப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

## புதிய பாலத்துக்கு அஸ்திவாரம்

கொழும்பு, வெள்ளி

மாத்தறையில் ரூ. 32 லட்சம் செலவில் 400 அடி நீளமான பாலம் ஒன்றுக்கு விரைவில் அட்ஸ்திவாரக்கல் நடப்படும்.

## செலாவணிப் பகுதியை ஏமாற்றிய அரசாங்க ஊழியர்கள்

### வெளிநாட்டுதூதராலயங்களிலும் பணம் பெற்றனராம்!

கொழும்பு, வெள்ளி

வெளிநாடு சென்ற சில அரசாங்க சேவையாளர் செலாவணிக் கட்டுப்பாட்டு இலாகாவை ஏமாற்றியுள்ளார்கள் எனத் தெரிகிறது. தமக்குத் தேவையான அளவுக்கும் மேலதிகமாகச் செலாவணிப் பர்மிட்டுகளை இவர்கள் பெற்றுக் கொண்டார்களாம்.

செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி இது விஷயம்பற்றித் திறைசேரிக் காரியதரிசிக்குப் புகார் செய்துள்ளார்.

இலங்கையை விட்டு வெளிநாட்டுக்குச் செல்லு முன்னர், இந்த அதிகாரிகளுக்கு வேண்டிய செலாவணி வழங்கப்பட்டதென்றும், அவர்களால் கேட்கப்பட்ட தொகை அவர்களுக்குரிய தொகையென்றே கருதப்பட்டு அவ்வாறு வழக்கப்பட்டதென்றும், ஆனல் வெளி நாட்டுக்குச் சென்றபின் அந்த நாடுகளிலுள்ள இலங்கைத் தூதராலயங்களில் தமது சம்பளங்களை அவர்கள் பெற்றுக்கொண்டார்களென்றும் செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி கூறியுள்ளார். இந்த விஷயத்தைத் திறைசேரிக் காரியதரிசி சகல இலாகாத் தலைவர்களுக்கும், நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் தெரிவித்துள்ளார்.

"தமது செலவுகளெல்லாவற்றுக்கும் செலாவணிக் காரியாலயத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்ட ஒரு சில உத்தியோகஸ்தர்கள், வெளிநாட்டிலுள்ள இலங்கை ஸ்தானிகர்களிடமிருந்தும், ஹைகமிஷனர்களிடமிருந்தும் திரும்பவும் மேலதிகமாகப் பணம் பெற்றுக்கொண்டார்கள்" எனத் திறைசேரிக் காரியதரிசி இலாகாத் தலைவர்களுக்கும், நிரந்தரக் காரியதரிசிகளுக்கும் அனுப்பி வைத்த செய்தி கூறுகிறது.

வெளி நாடுகளில் உபகாரச் சம்பளப் படிப்புக்குச் செல்லும் உத்தியோகஸ்தர்களின் செலாவணி, இனிமேல் செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே வழங்கப்படும் எனத் திறைசேரிக் காரியதரிசி கூறியுள்ளார்.

## கரவெட்டிக் கொலை ஒருவர் கைது

உடுப்பிட்டி, வெள்ளி

கடந்த செவ்வாய்க்கிழமை வெட்டுக் காயங்களுடன் தில்லையம்பலப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்த கந்தப்பர் கண்ணகை என்னும் 60 வயதுப் பெண்ணின் கொலை விசாரணையைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிசார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

துப்புத் துலக்கு முகமாகப் பலரின் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறான பரிதாபமான கொலை ஒன்று கரவெட்டியில் சில மாதங்களுக்கு முன் நடந்ததும் குறிப்பிடத்தக்கது.

### மணி வாக்கு

எமது நேரத்தில் ஒரு பாகத்தையேனும் எமது உண்மையான நிலையைப் பற்றி அறிதற்பொருட்டுச் செலவிடுவோமாயின், அதனுல் நாம் பெரும் பயனை அடைவோம். அதை அறிந்தால் நாம் கருதியது அனுகூலமாவதற்கு வேண்டிய ஆற்றலும் விளக்கமும் உண்டாதல்கூடும்.

— ஓர் அறிஞர்

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு சித்திரை 15 மீ உ (28-4-62)

## நேருஜியின் விஜயம்

வருகிற ஜுலை மாதத்தில் இந்தியப் பிரதமர் நேருஜி இலங்கைக்கு விஜயம் செய்ய ஒப்புக் கொண்டிருப்பதாயும், அப்போது இலங்கை-இந்தியர் பிரச்சினையை பூரணமாகத்தீர்க்கநடவடிக்கைஎடுக்கப் படுமென்றும் சென்ற வியாழக்கிழமை பார்லிமெண்டில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் நிதிமந்திரி பதிலளித்தார்.

இந்தியாவின் பிரதமமந்திரியாக மூன்றும் முறையாகத் தெரிவு செய்யப்பெற்றுள்ள நேருஜியை இலங்கைக்கு வருமாறு இலங்கைப் பிரதமர் அழைத்ததும் அவர் அதை ஒப்புக் கொண்டதும் வரவேற்கத்தக்கதும் மகிழ்ச்சிக்குரியதுமாகும்.

ஆசிய ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையத்தைத் திறந்து வைக்க அவர் வரும் சமயத்தில் 'நாடற்றவர்' எனப்படும் இலங்கை இந்தியரின் பிரச்சினையைப் பூரணமாகத் தீர்ப்பது பற்றி அவருடன் பேச்சுகள் நடத்தப்போவதாகக் கூறுகிறார் அமைச்சர் பீலிக்ஸ். 1939-ம் வருடத்திலிருந்து நேருஜியுடன் இதே பிரச்சினையைப்பற்றி இலங்கை அரசாங்கம் பன்முறையும் பேச்சுக்கள் நடத்தியுள்ளது. இதன்பயன் வரவர சம்பந்தப்பட்ட மக்களின் நிலைமை மோசமாகிறதே ஒழிய, பிரச்சினை தீர வழி பிறக்கவில்லை.

இந்தியாவுக்குப் பிரயாணம் செய்யும் உரிமை பலவருடகாலமாக அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. பார்லிமெண்டில் முன்னர் இம்மக்கள் சார்பாக ஏழு அங்கத்தவர் இருந்தனர். இடையிலே ஒருவர் கூட இல்லை. இப்போது ஒரே ஒரு நியமன ஸ்தானமே. (பிரதமர் ஸ்ரீமாவோவின் தயவால்) உள்ளது. ஆறு ஸ்தானங்கள் தேர்தல் மூலம் அவர்களுக்கு அளிக்க ஒழுங்கு செய்யப்படுமென்று டில்லியில் செய்துகொண்ட ஒப்பந்தமும் காற்றில் பறக்கவிடப்பட்டுவிட்டது. இனி தாய்மொழியான தமிழ் மூலம் கல்வி கற்கும் உரிமையும்கூட மலைநாட்டிலுள்ள அம்மக்களின் குழந்தைகளுக்கு மறுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்! மனித நீதிக்கும் ஜனநாயகத்துக்கும் மாறுன இந்த நடவடிக்கைகளாலேயே பிரச்சினை மோசமாகியுள்ளது.

மனிதர்களைப்பற்றிய இந்தப் பிரச்சினையை மனித நீதியுடன் தீர்க்க வேண்டுமென்றுர் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா. ஆனல் இதற்கு நேர்மாருக பிரயாண உரிமை, கல்வி உரிமை, கூப்பன் அரிசி உரிமை, மொழி உரிமை இவை அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன. 'நாடற்றவர்களை' இந்தியாவுக்கு விரட்டவே இவ்வித மறைமுக நிர்ப்பந்தங்கள் செய்யப்படுவதாகவும் புகார்கள் எழுந்துள்ளன. மனித நீதிக்கு மாருன இவ்வித நிர்ப்பந்தங்களை நீக்கினலே, சூழ்நிலை மேம்பட்டு, இப்பேச்சு வார்த்தை மூலம் சமரசம் ஏற்படுவது சாத்தியமாகும்.

'தேசிய ஒற்றுமை' என்பது பற்றி கொழும்பிலே ஒரு கூட்டத்தில் திரு. வில்மட்பெரேரா பேசுகையில், நேருஜி மூன்றும் முறையாக பாரதத்தின் பிரதமராகியுள்ளதால் இலங்கை பிரதமருடனுள்ள நல்லெண்ணத்தைக் கொண்டு மனிதாபிமானத்துடன் இந்தப் பிரச்சினையை ஆராய்ந்து முடிவு செய்வது கஷ்டமில்லை என்று நம்புகிருர். இருதரப்பினரும் மனிதாபிமானம் காட்டினலே, 'நாடற்றவர்' என்ற எட்டு லட்சம் பேர்களின் சங்கடங்கள் சீக்கிரம் குறைவதுடன் இப்பிரச்சினையும் தீர்ந்து நாடும் ஒற்றுமையாக முன்னேற வழி பிறக்கும்.

---

இன்று மகா மகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர் 19-வது நினைவுநாள்

# செல்லரித்த ஏடுகளை அச்சிலிட்ட அறிஞர்

இன்று பத்தொன்பதாவது நினைவுநாள். தமிழுக்குப் புத்துணர்ச்சியூட்டப்பட்டுவரும் இந்நாளில் இந்நிலை வருவதற்குரிய காரணங்களை அறிந்து கொள்ளல் சிறப்புடையது. தமிழ்மொழி வளரக் காரணமாக இருந்தவர்கள் பலர். ஈழமும், தமிழகமும் ஒருமித்துப் புகழ்பாடத் தன்னலமற்ற சேவையாளர்களாக இருந்தவர்கள் சிலர்.

### தமிழ்த்தொண்டு

ஒருநூற்றுண்டு காலத்துக்கு முன்னர் மொழி வளர்ச்சியில் இருந்த நிலை வேறு; இன்றுள்ள நிலை வேறு. அன்றைய நிலை வளரவிடாமல் கத்திரிக்கப்படுகின்ற 'குரோட்டன்' செடிபோன்றது. இன்று நாம் சுதந்திரர்கள். நமது மொழி என்கின்ற உரிமை மிகுதியாகக் காணப்படும் நாள் இது. இன்று நாம் தமிழ்மொழி இனிமையானது, காலத்தால் அழியாதது என்றெல்லாம் பெருமை பேசுவதற்கு வித்திட்டவர்களிலே மகாமகோபாத்தியாய சாமிநாதையரும் ஒருவர். விலை மதிக்கமுடியாத மாணிக்கங்களாகிய தமிழ்க் காவியங்கள் பல அவ்வப்போது ஏற்பட்ட சூழ்நிலைகளினல் அழிந்தன. அழிந்தன போக எஞ்சியவற்றை அழிந்து போகவிடாமல் அவற்றைத் துருவி ஆராய்ந்து அச்சுவாகனமேற்றி தமிழ்ச்சமுதாயத்தில் வீறுநடை போட்டவர் சாமிநாதையர் ஆகும்.

டாக்டர் சாமிநாதையர் தமது வாழ்வைத் தமிழன்னையை அழகுபடுத்துவதற்காகவே செலவிட்டார். இசைத்தமிழ்க் குடிமரபில் உதித்த அவர் இயற்றமிழை அழகுபடுத்தினுர். பண்டைப் பெரும் புலவர்களால் ஆக்கப்பட்டுக் காலத்தால் அழியாது நிலைத்து நிற்கும் இலக்கியங்களை எதிர்காலச் சந்ததியினரும் படித்தின்புறவேண்டும் என்றநோக்கில் அவற்றை வெளிப்படுத்திய பெருமை சாமிநாதையருக்கே உரியது.

### சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் உதவி

புத்தகங்களை அச்சுவாகனமேற்றுவதற்கு சாமிநாதையருக்கு வழிகாட்டியாக இருந்தவர் இராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களாகும். இதனை சாமிநாதையரே கூறுகிருர். சீவகசிந்தாமணி மூலமும், உரையும் என்ற நூலின் முன்னுரையில் சாமிநாதையர் பின்வருமாறு குறிப்பிடுகின்ருர்: "இவற்றை விரையில் பதிப்பித்து வெளியிடும்படி யாழ்ப்பாணம் ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் பலமுறை தூண்டினமையால் விரைந்து அச்சிடுவிக்கத் துணிந்தேன்."

இதிலிருந்து ஐயரவர்களுக்கு இத்துறையில் நீந்தக்கற்றுக் கொடுத்தவர் திரு. தாமோதரம்பிள்ளை அவர்கள் என்பது புலனுகின்றது. சாமிநாதையர் சைவசமயத்தைச்சேர்ந்தவர். அவர் முதன்முதலாகப் பதிப்பித்த 'சீவகசிந்தாமணி' ஜைனசமயநூல். அந்நூலை ஏட்டுச்சுவடியிலிருந்து அச்சுவாகனமேற்றுகிறபோது எத்தகைய கஷ்டங்களை அனுபவித்திருப்பார் என்பதனைச் சொல்லல் மிகை. ஏடுகள் யாவும் பிழையனவாய், தொடக்கூடாத முறையிலேயேகூட இருந்தன. அவற்றை ஆராய்தல் சிரமமானது என்பதனை அத்துறைபற்றி அறிந்தோர் உணரக்கூடும். பழைய ஏடுகளில் மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியே யிராது. இது காம்பு, சுழி என்பதனை அறியமுடியாது. இதற்கிடையே ஏடுகள் செல்லரித்துப் பொட்டுர்ந்தவையாகவும் இருக்கும். ஒருபுலவர் ஏடுகளில் கறையான் அரித்திருப்பதனை 'செல்துளைத்துளை யன்று' என்று குறிப்பிட்டு அவை எழுத்துக்களுக்குப் புள்ளியிட்டுள்ளன என்று கூறியிருக்கிருர்.

ஐயாவரகள் ஏடுகளைத் தேடியலைந்ததுடன் அவற்றை புரிந்து கொள்ளவே கஷ்டப்பட்டார். இச் சந்தர்ப்பங்களில் அவர் அழுத கண்ணீர்த் துளிகள் ஏடுகளைக் கழுவினவாம்.

### உரைகளும் எழுதினுர்

டாக்டர் சாமிநாதையர் நூல்களைப் பதிப்பித்ததுடன் நின்றுவிடவில்லை. பல நூல்களுக்கு உரை எழுதினுர். ஐயாவரகளால் புத்துயிர் பெற்ற நூல்களின் விபரம் வருமாறு:

ஐம்பெருங் காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, என்பன. பிறகாவியங்கள் 2, புராணங்கள் 13, சிறு பிரபந்தங்கள் 42, இலக்கியம் 4, உரைநடை 19.

### சிறந்த சொற்பொழிவாளர்

ஐயரவர்கள் சிறந்த சொற்பொழிவாளராக விளங்கினர் அவ்வப்போது இவர் செய்த சொற்பொழிவுகள் நூல் வடிவாய் வெளிவந்தன. அவர் 'ஆனந்தவிகடன்' பத்திரிகையில் 1940-ம் ஆண்டிலிருந்து 'என் சரித்திரம்' என்ற தலைப்பில் தமது சரிதையை எழுதினுர். 122 அத்தியாயங்களில் எழுதப்பட்டன. அச்சரித்திரம் முற்றுப்பெருததோடு, ஐயரவர்களின் சுமார் 40 வருட சேவையை உணரமுடியாமல் போய்விட்டது.

1906-ம் ஆண்டு சாமிநாதையருக்கு அரசியலார் மகாமகோபாத்தியாய என்னும் பட்டத்தை வழங்கினர். 1932-ம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் 'டாக்டர்' பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தது. தமது சரித்திரத்திலேயே தாம் கண்டனவற்றை, கேட்டனவற்றை தமக்கு ஏற்பட்ட அநுபவங்களையெல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

தமிழுக்காகவே வாழ்ந்த சாமிநாதையர் அவர்கள் செய்த தொண்டுகளை தமிழ் மக்கள் மறந்துவிடமுடியாது. சென்னை நகரை அவருடைய திருவுருவச்சிலை அலங்கரித்ததுடன் அவருடைய தொண்டுகள் பூரணத்துவமடைந்துவிடவில்லை. இதனை நாம் நன்கு உணரவேண்டும். தமிழ்மொழி வளர்ச்சிக்கு இன்று எவ்வளவோ பணிகள் செய்யலாம். அவற்றைக்காலத்திற்கு ஏற்ற முறையில் செய்து தமிழை வளம் படுத்தினல் அது சாமிநாதையருக்குச் செய்யும் சிறந்த அஞ்சலியாகும்.

—"மாவை பாரதிநேசன்"

---

# உணவுப்பயிர்களை அதிகமாக பயிரிடுக

## வவனியா பொருட்காட்சிக்கு கமத்தொழில் அமைச்சர் செய்தி

வவனியா, வெள்ளி

இன்றியமையாப் பொருள்களான சிறிய உணவுப் பயிர்களைப் பயிரிடுவதில் எங்கள் கமக்காரர் ஓரளவு கூடுதலான ஆர்வங்காட்டுவராயின், இப்பொருள்களை இறக்குமதி செய்யாது நிறுத்திவிடலாம். உள்ளூர் கமத்தொழிற் சங்கங்களும்,பிறஸ்தாபனங்களும் தத்தம் ஊர்களில் இவ்வுணவுப் பொருள்களை உற்பத்தி செய்யுமாறு ஊக்குவித்து இது சம்பந்தமாய் நன் முறையில் முயற்சி செய்யலாம்."

இவ்வாறு கமத்தொழில் காணி நீர்ப்பாசன மின்சார மந்திரி திரு. சி. பி. டி' சில்வா கடந்த வியாழக்கிழமை வவனியாவில் நடைபெற்ற கமத்தொழில், கைத்தொழில் பொருட்காட்சி ஞாபகார்த்தமாக வெளியிட்ட மலருக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிட்டதாவது:-

நாடோறும் அதிகரிக்கும் எங்கள் சனத்தொகைக்கு உணவு அளிப்பதன் பொருட்டு எங்கள் ஊர்களில் விளையும் நெல்லையும் பிற சிறிய உணவுப் பயிர்களையும் தீவிரமாக அதிகரிக்கவேண்டிய அவசியத்தை நாம் எல்லோரும் அறிவோம். எங்கள் நாட்டுக்குத் தேவையான நெல்லின் அரைப் பங்

(5ம் பக்கம் பார்க்க)

---

## ஐயாறன் எழுதுவது

நேற்றுக் காலை ஓர் அன்பர் டெலிபோன் செய்தார். பாரதப் பிரதமர் நேருஜி, 'ஓம் நமசிவாய' என்ற பஞ்சாட்சர மந்திரத்தை வாய்க்குள் கூறிய செய்தியைப் பேப்பரில் படித்து மிக மகிழ்ச்சி அடைவதாகவும் தெரிவித்து பழைய கதை ஒன்றைச் சொன்னுர்.

16 வருடங்களுக்கு முன் பண்ணைப் பாலம் போடு முன்பாக, கடலில் தோணியில் செல்லுகையில், ஆபத்தான இடத்திலே, தோணியிலிருப்பவர்கள் எல்லோரும் சேர்ந்து 'ஹரோஹரா' 'ஹரோஹரா' என்று கோஷம் செய்வது வழக்கமாம். ஒரு பாதிரியார் அதே தோணியில் வருகையில், அவரும் எல்லாருடன் சேர்ந்து "ஹரோஹரா" என்று சொல்லவரென்றும், நேருஜி 'நமசிவாய' என்று கூறியதைக் காண அந்தப் பழைய கதை ஞாபகம் வந்ததாகக் கூறிச் சிரித்தார்.

* * *

எனக்கு வேறொரு கதை ஞாபகம் வருகிறது. இருபது வருடங்களுக்குமுன், அதாவது 1942 ம் வருடத்தில் ஜப்பானியர், கொழும்பிலே குண்டு போட்டார்களல்லவா? குண்டு விழுகையில், 'ராம ஜபம்' செய்தால் மனக்கவலையில்லாமலிருக்கலாம் என்று காந்தி அடிகள் கூறியிருந்தார். அதைப் பின்பற்றி, சில நண்பர்கள் மேசைக் கடியிலே தலையை பாதுகாப்பாக வைத்துக்கொண்டு 'ராம ராம' என்று ஜபம் செய்தோம். எங்களிடையே இருந்த கிறிஸ்தவ நண்பரின் வாயும் எங்களுடன்மேசைக்கடியிலிருந்து 'ராம ராம' என்று கூறி ஜபம் செய்தது! அந்த ஜப்பான் குண்டுக்கு நாங்கள் எல்லாரும் தப்பிவிட்டோம். அது என்றும் மறக்கமுடியாத சம்பவமாகும்.

* * *

மகாத்மாகாந்தி, ராம ஜபம் செய்துவந்தார். துப்பாக்கிக் குண்டு பாய்ந்து உயிர் துறக்கும்போதும் "ஹேராம்" என்றுசொல்லிக் கடைசிமூச்சு விட்டார்.

தனது வாரிசு நேருஜிதான் என்றுர் மகாத்மா. ஆனல் நேருவோ தெய்வநம்பிக்கை இல்லாதவர். இந்துவாகப் பிறந்த அவர் பத்தாவது வயசிலே பூணூல் போட்டு, உபநயனம் செய்துகொண்டார். ஆனல் சந்தியாவந்தனம் ஒரு நாளும் செய்தாரோ என்பது தெரியவில்லை.

புதுடில்லியிலிருந்து செல்லுகையில் சப்தரிஜி ஆசிரமத்தில் எதிர்பாராத முறையிலே, ஐந்தெழுத்து மந்திரத்தை ஒரு பெரியவர் அவருக்கு வலிய வந்து போதித்தார். முதலில் தயங்கிய நேருஜி, பின்னர் அந்த மந்திரத்தைத் தம்மையும் மீறிச் சொல்லவேண்டியதாயிற்று! இது தற்செயலா? அல்லது தெய்வச்செயலா? அவனன்றி ஓரணுவுமசையுமா? இனி நேருஜிக்கு மிக நல்ல காலம் என்கிருர் நண்பர். நேருஜிக்கு நல்லகாலமானல் இந்தியாவுக்கும் அப்படித்தானே!

* * *

நாளை திருநாவுக்கரசரின் குருபூசை. இன்று முதல் நான்கு நாட்களுக்கு வட்டுக்கோட்டை, புங்குடுதீவு, கீரிமலை முதலிய பல இடங்களிலும் சைவமும் தெய்வத்தமிழும் முழங்குகின்றன.

* * *

இல்லக விளக்கது இருள் கொடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே!

— திருநாவுக்கரசர்.

# கீரிமலையில் அகில இலங்கை சைவ மகாநாடு

## நிகழ்ச்சிகள் விபரம்

தெல்லிப்பழை, வெள்ளி. அகில இலங்கைச் சைவ மகா நாடு கீரிமலையில் வருகிற ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி இரு தினங்கள் நடைபெற விருக்கிறது. அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மாகசபை, கீரிமலை ஸ்ரீ வைத்திலிங்கம் மடத்தில் இம் மகாநாட்டினை நடத்துகிறது. மகாநாட்டின் முக்கிய அம்சமாக பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை எழுதிய கந்த புராண போதனை நூல் வெளியீட்டு வைபவம் விளங்கும்.

ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு வழக்கறிஞர் திரு. நம சிவப்பிரகாசம் தலைமையில் மகாநாட்டு முதல் நாள் நிகழ்ச்சிகள் ஆபம்பமாகும். திருநாவுக்கரசு சுவாமிகள் பற்றி பண்டிதர் திரு. வ. கந்தையா உரை நிகழ்த்துவார். பின்னர் புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யபடுவர்

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் திங்கட் கிழமை காலை திரு. நம சிவப்பிரகாசம் தலைமையில் ஆரம்பமாகும். ஏட்டுச் சுவடி ஊர்வலம், காலை நிகழ்ச்சியில் முக்கிய அம்சமாக இருக்கும். திரு. கே. பி. ஹரன் திறப்புரை நிகழ்த்துவார். இதனைத் தொடர்ந்து பண்டிதை பாலாம்பிகை தனபாலசிங்கம், புலவர் ம பார்வதிநாதசிவம் ஆகியோர் விரிவுரை நிகழ்த்துவர்.

பிற்பகல் நிகழ்ச்சியில் சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமையில் நூல் வெளியீட்டு விழா ஆரம்பமாகும். 'கந்த புராண போதனை' நூலை சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் வெளியீட்டு வைப்பார். அந் நூலுக்கு மதிப்புரையை கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் நிகழ்த்துவார்.

மாலை நிகழ்ச்சிகள் யாழ். மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் ஆரம்பமாகும். செல்வி. வே. புவனேஸ்வரி, செல்வி. நாகேஸ்வரி கந்தவனம் ஆகியோர் பேசுவர். திருமறையோதல், இன்னிசைக் கச்சேரி, உபந்நியாசம் என்பனவும் மகாநாட்டில் இடம் பெறும்.

# புதிய தொழில் வெற்றி இன்றேல் லைசன்ஸ்கள் ரத்தாகலாம்

கொழும்பு, வெள்ளி. புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான 'லைசன்சுகளை'ப் பெற்றுக்கொண்டவர்கள் எந்த அளவுக்குத் தமது முயற்சிகளில் தேர்ச்சி பெற்றுள்ளார்கள் என்பது பற்றி கைத்தொழில் உள்நாட்டு கலாச்சார அமைச்சு வெகு விரைவில் ஒரு பரிசீலனை நடாத்தவிருக்கிறது. புதிதாக லைசென்ஸ் பெற்றுக்கொண்டவர்களிடமிருந்து அவர்களது தேர்ச்சியறிக்கைகளை அனுப்பி வைக்கும் படி அமைச்சு கேட்டுள்ளது.

போதிய அளவுக்கு இவர்களிடையே முன்னேற்றமும் உழைப்பும் காணப்படாவிட்டால் இவர்களது 'லைசென்சுகளை' ரத்துச் செய்து வேறு ஆட்களுக்குக் கொடுக்கக் கைத்தொழில் இலாகா உத்தேசித்திருப்பதாக, இலாகா அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பவர்களுக்கு சமீபத்தில் 'லைசென்சுகள்' வழங்கப்பட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

## தூதராலய ஊழியர் தற்கொலை

கொழும்பு, வெள்ளி. கடந்த புதன்கிழமை பிற்பகல் பேராதனை பூந்தோட்டத்தில் தற்கொலை செய்துகொண்ட நபர், கொழும்பு அமெரிக்க தூதராலயத்தைச் சேர்ந்த 36 வயதுள்ள திரு. எஸ். ரமணயக்கா என்று அடையாளம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இறந்தவரின் மரணம் குறித்து நடைபெற்ற விசாரணையின் போது, கிழனியைச் சேர்ந்த ஆசிரியை திருமதி ரோசலின் குணசேகரா (26 வயது) சாட்சியமளிக்கையில் ராமணயக்காவை ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்ததாகவும், ஐந்து மாதக் குழந்தையொன்று உண்டென்றும் ரமணயக்கா தற்கொலை செய்துகொள்வதற்கான காரணமெதுவுமில்லையென்றும் கூறினர்.

மரணவிசாரணை நடத்திய கண்டி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. சலிம் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## பஸ்லுல்ஹக் காலமானர்

டாக்கா, ஏப். 27. கிழக்குப் பாகிஸ்தானின் முன்னாள் கவர்னர் திரு. பஸ்லுல்ஹக் இன்று காலமானர். அவருக்கு வயது 89. திரு. பஸ்லுல்ஹக ஆஸ்பத்திரியில் சுகவீனமுற்றிருந்தார். 1913-ம் ஆண்டு திரு. ஹக் வங்காள சட்ட சபையில் அங்கத்தினராய் இருந்தார். பின் கல்வி மந்திரியாய் இருந்தார். 1935 ல் கல்கத்தா மேயரானர். 1937 ல் கிழக்கு வங்காள முதன் மந்திரியாயும் இருந்தார். 1916 முதல் 1921 வரை அவர் முஸ்லிம் லீக்கின் தலைவராகவும், இடையில் சிறிது காலம் லீக்கை விட்டுப் பிரிந்து காங்கிரசின் பொதுக் காரியதரிசியாகவும் இருந்தார். 1954 ல் கிழக்குப் பாகிஸ்தான் முதன் மந்திரியாகவும், பின் பாகிஸ்தான் மத்திய அரசாங்க மந்திரியாகவும், இறுதியில் கிழக்குப் பாகிஸ்தான் கவர்னராகவும் இருந்தார்.

## உணவுப் பயிர்களை..

(4-ம பக்கத் தொடர்ச்சி)

கைத்தானும் நாம் விளைப்பதில்லை. பிற உணவுப் பொருட்களை இன்னுங்குறைவாகவே விளைவிக்கின்றோம். இவ்வுணவுப் பொருள்கள் பலவற்றை நாம் நன்ருக எங்கள் நாட்டிலேயே விளைவிக்கலாம். மிளகாய், பருப்புவகை, வெண்காயம் ஆகிய இன்றியமையாப் பொருட்கள் எங்கள் ஊர்களிலேயே சிறப்பாக வரண்ட பிரதேசங்களில் விளைவிக்கப்படலாம். இவற்றையும் வேறு பல உணவுப் பயிர்களையும் பயிரிடும் கமக்காரர் நட்டமடையாவண்ணம் அரசாங்கத்தின் உத்தரவாத விலைத் திட்டம் தாக்குகின்றது.

பிறசங்கங்களின் ஒத்துழைப்போடு இம்முறைகளை விருத்தி செய்யவே தோட்டக் கமத்தொழில் குழுக்களை நாடெங்கணும் தொடங்கியுள்ளேன். இக்குழுக்கள் விவசாய விருத்தியில் அதிக உதவி செய்யும்.

## கோப்பாய் கழகத்தின் ஆண்டுவிழா

### இன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், வெள்ளி. கோப்பாய் வடக்கு இளைஞர் விவசாயக் கழகத்தின் 8-வது வருடாந்த விழாவும் பொருட்காட்சியும் இம்மாதம் 28-ந் திகதி மாலை கோப்பாய் சரவணபவானந்த வித்தியாசாலை மண்டபத்தில் கழகத் தலைவர் திரு. பொ. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும். பரிசளிப்பு வைபவமும், 'தோட்டக்காரர் மாப்பிள்ளை' என்ற சமூக நாடகமும் இடம் பெறுமென அறிவிக்கப்படுகிறது.

## பேச்சுப்போட்டியில்

### சரவணபவான் இல்லம் வெற்றியீட்டியது

கோப்பாய், வெள்ளி. கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் வருடாந்தப் பேச்சுப்போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

**கீழ்ப்பிரிவு**

1. த. மால்மருகன். 2. சு. தர்மகுலராசா. 3. பொ. பாலசுப்பிரமணியம்.

**மத்தியபிரிவு**

1. மு. நிர்மலானந்தன். 2. சு. கணேஷ், ம. செல்வரத்தினம்.

**மேற்பிரிவு**

1. கை.குமரகுருநாதன். 2. ச. இரங்கநாதன் 3. த. யோகானந்தர்.

**அதிமேற்பிரிவு**

1. க. நித்தியானந்தன். 2. இ. தங்கராசா. 3. செ. சரவணபவான்.

இப் போட்டியில் சரவணபவான் இல்லம் 14 அதிகப்படியான புள்ளிகளால் சிதம்பரப்பிள்ளை இல்லத்தைத் தோற்கடித்தது.

## புதிய ஜே. பி.க்கு வரவேற்பு

உடுப்பிட்டி, வெள்ளி. உடுப்பிட்டிக் கிராமசபை உப தலைவரும், சமீபத்தில் ஜே. பி. யாக நியமிக்கப்பட்டவருமான திரு. எம் யோகலிங்கத்திற்கு உடுப்பிட்டி மக்களால் ஒரு வரவேற்புபசாரக் கூட்டம் நடைபெற்றது.

திரு. யோகலிங்கத்தின் சேவை நலத்தைப் பாராட்டி ஆசிரியர் வி. தங்கராஜா உட்பட பலர் பேசினர்.

## குத்திக் காயமேற்படுத்திய வழக்கில் எதிரி விடுதலை

சாவகச்சேரி, வெள்ளி. பரந்தன் சோடா தொழிற்சாலையில் கடமையாற்றும் நமசிவாயம் இராமநாதன் என்பவரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தியதாகவும் அதே நேரத்தில் எஸ். பாலசுப்பிரமணியம் என்பவரைத் தாக்கியதாகவும் கிளிநொச்சிப் பொலிசாரால் குற்றம்சாட்டி சுவாமிநாதன் செல்வரத்தினம்மீது தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைசெய்யப்பட்டது விசாரணை முடிவில் நீதிபதி திரு. ஏ. வைத்தியலிங்கம் எதிரியைச் சுற்றவாளியாகக்கண்டு விடுதலை செய்தார்.

## பிஜோ இந்தியா வரமுடியாது

புதுடில்லி, ஏப். 27. பகை நாகர் தலைவர் பிஜோ, பிரிட்டிஷ் பிரஜாஉரிமை பெற்றிருந்தபோதிலும் இந்தியாவுக்குள் பிரவேசிக்கமுடியாதென்றும், மீறி வந்தால் அவர் கைதுசெய்யப்படுவார் என்றும் பார்லிமெண்டில் அறிவிக்கப் பட்டது.

# கயரோகம் இந்நாட்டின் முதல் எதிரி

## ஒழிக்க முன்வருமாறு வேண்டுகோள்

மானிப்பாய், வெள்ளி. "கயரோகத்தை முறியடிக்க இத்தகைய சங்கங்கள் அரிய சேவை செய்ய முடியும். கசம் எமது முதல் எதிரி. அதை நாம் அழிக்க வேண்டும். இல்லையேல் அது நம்மை அழித்து விடும்."

இவ்வாறு இலங்கை கயரோக நிவாரண தேசிய சங்கத்தின் வலிகாமம் மேற்குக் கிளையினர் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் நடாத்திய போட்டிகளை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் சங்கத்தின் காரியதரிசி திரு. உ. ந. தேவகடாட்சம் குறிப்பிட்டார். போட்டியில் பல நிலையங்கள் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

போட்டி முடிவுகள் வருமாறு:-

**கயரோகச் சம்பாஷணை**

மாதகல் மாதர் கிராம முன்னேற்றச்சங்கம், இளவாலை சித்திரமேழி சனசமூக நிலையம், நவாலி முருகானந்த சனசமூக நிலையம்.

**கயரோகப் பாட்டு**

மாதகல் மாதர் கிராம முன்னேற்றச் சங்கம், சில்லாலை மாதர் கிராம முன்னேற்றச் சங்கம், இளவாலை சித்திரமேளி சனசமூக நிலையம்.

## குரும்பசிட்டி பஸ் சேவை

### முதலாம் ஆண்டு பூர்த்தி

குரும்பசிட்டி, வெள்ளி. குரும்பசிட்டி பஸ் சேவையின் முதலாம் ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு, குரும்பசிட்டி கிராமமுன்றேற்றச்சங்க ஆதரவில், குரும்பசிட்டி கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் இம்மாதம் 29-ம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு ஒரு பொதுக் கூட்டம் நிகளும்.

## பண்டிதமணி நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பாராட்டு விழா நிர்வாகசபைக் கூட்டம், கோப்பாய் அரசினர் மகளிர் பயிற்சிக் கல்லூரிப் பண்டிதர் சு. இராசையா தலைமையில் யாழ்ப்பாணம் ஆசிரியர் சங்கக் கந்தோர் மண்டபத்தில் நடைபெற்றது.

பண்டிதமணிகளால் எழுதப்பட்ட "சமயக்கட்டுரைகள்" என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர் வரும் வைகாசியில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்விழாவில் இலங்கை இந்தியப் பேரறிஞர்கள் பலர் கலந்து கொள்வார்களெனவும் தெரிய வருகிறது.

## ஐக்கிய திருச்சபை கலந்துரையாடல்

பண்டத்தரிப்பு, வெள்ளி. மரியாயின்சேனை பத்திரிசிய இயக்கத்தின் சார்பில் பண்டத்தரிப்பு புனித ஜசிந்தா பாடசாலை மண்டபத்தில் இம்மாதம் 29-ம் திகதி "ஐக்கிய திருச்சபை" என்ற பொருள் பற்றிக்கலந்துரையாடல் நடைபெறும்.

பேச்சாளர்கள்: வண. பிதா தியோகுப்பிள்ளை, பேரறிஞர் பி. சவிரிமுத்து ஆகியோர் கலந்து கொள்ளுகின்றனர்.

## கத்தோலிக்க தொழிலாளர்

ஊர்காவற்றுறை, வெள்ளி. எதிர் வரும் மே தினத்தைச் சிறப்பான வகையில், கொண்டாடுவதற்கு யாழ்ப்பாணம் "கத்தோலிக்க தொழிலாளர்கள்" முயற்சி செய்து வருகின்றனர்.

அன்று மாலை பாசையூரில் இருந்து பிரமாண்டமான கத்தோலிக்க தொழிலாளர்கள் ஊர்வலமாக, அமைதியான முறையில் சென்று கடலலை மைதானத்தை வந்தடைவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டும் வருகிறது.

## காதைக் கடித்தார் ரு. 300 அபராதம்

கம்பஹா, வெள்ளி. காதைக் கடித்த ஒருவருக்கு, கம்பஹா மாஜிஸ்திரேட் ரூ. 300 அபராதம் விதித்துள்ளார்.

தொறனகொட என்ற இடத்தைச் சேர்ந்த டி. ஜி. ஜேம்ஸ் அப்புஹாமி என்பவர் அதே ஊரில் வசிக்கும் டி. நோ. சோமரத்ன என்பவரின் காதைக் கடித்துக் காயம் உண்டுபண்ணியதாக குற்றம் சாட்டப்பட்டுத் தொடரப்பட்ட வழக்கு கம்பஹா மாஜிஸ்திரேட் திரு. ஏ. டி. ஜே. குணவர்த்தன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது. விசாரணை முடிவில் மாஜிஸ்திரேட், ஜேம்ஸ் அப்புஹாமிக்கு ரூ. 300 அபராதம் விதித்தார்.

## இன்னிசை சொற் பொழிவு

ஊர்காவற்றுறை, வெள்ளி. யாழ்ப்பாணம் - வில்லூன்றி விநாயகராலயத்தில் 'கிருஷ்ணன் தூது - அருச்சுனன் என்னும் சரித்திரங்கள் சம்பந்தமான இன்னிசைச் சொற்பொழிவுகள் நடைபெற ஆலயப்பணியாளர் - திரு. சோ. இராசரெத்தினம் ஒழுங்கு செய்துள்ளார்.

## வடபகுதி அசைஸ் முடிவு

### வழக்கறிஞருக்கு நீதியரசர் நன்றி

யாழ்ப்பாணம், வெள்ளி. "நீதியையும், சட்டத்தையும் நிலைநாட்ட யாழ்ப்பாணம் வழக்கறிஞர்கள் ஒத்துழைத்ததற்காக யாழ்ப்பாணம் வழக்கறிஞர் சங்கத்துக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் இந்தப் பருவத்திற்கான விசாரணையை முடித்துவைத்து நன்றி தெரிவித்துப் பேசினர். வடபகுதி அசைஸ் நீதி மன்றம் இன்று அதன் இப்பருவ விசாரணைகளை முடித்து வைத்தது.

பிஸ்கால் உத்தியோகத்தர்கள் சுருக்கெழுத்தாளர்கள் லிகிதர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் தங்கள் கஷ்டத்தையும் பாராது மிகத் தியாக உணர்ச்சியுடன் கடமையாற்றியமையை நீதியரசர்பாராட்டியதோடு நன்றியும் தெரிவித்தார்.

# 'எதிரி தலையில் அடித்ததை நான் பார்த்தேன்'

## உடுவில் கொலைவழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், வியாழன்

உடுவிலைச் சேர்ந்த பொன்னன் இராசையா என்பவர் அதே ஊரைச்சேர்ந்த நாகமுத்து மாணிக்கம் என்பவரைக் கொலைசெய்ததாக சுன்னாகம் பொலிசாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெள்ளி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இக்கொலைச் சம்பவத்தைக் கண்ணால் பார்த்ததாகக் கூறப்படும் உடுவிலைச்சேர்ந்த தவசிகந்தையாவின் சாட்சியம் பதிவுசெய்யப்பட்டது.

அவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"எனக்குக் காலஞ்சென்றவரைத் தெரியும், இக்கொலைச் சம்பவம் எனது தகப்பனுரின் காணியில் தான் நிகழ்ந்தது. கடந்த மாதம் 20-ம் திகதி நான் கள்ளுக் குடிப்பதற்காக ஓர் கள்ளுக்கொட்டிலுக்குச் சென்றேன். அக்கள்ளுக் கொட்டில் வயிரமுத்து என்பவருக்குச் சொந்தமானது. சின்னத்துரை, சீனியன் ஆகிய இருவரையும் அக்கள்ளுக்கொட்டிலில் சந்தித்தேன். அப்பொழுது எதிரி தனது வயிற்றைப் பிடித்துக்கொண்டு கள்ளுக் கொட்டில் இருந்த திசையை நோக்கி ஓடிவந்தார். அவர் அப்பொழுது உடுத்திருந்த சாரத்தில் இரத்தம் சிந்தியிருந்தது. கொலைசெய்யப்பட்ட மாணிக்கம் ஓர் கத்தியுடன் எதிரியைப்பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்தார். எதிரி சடுதியாக ஓர் தீட்டுத் தடியை எடுத்து காலஞ்சென்றவரின் தலையில் அடித்தார். காலஞ்சென்றவர் தான் கொண்டு வந்த கத்தியுடன் அடிவாங்கிய இடத்தில் இருந்துவிட்டார். எதிரியும் சில யார் தூரம் சென்றபின் தான் கொண்டு வந்த தீட்டுத்தடியுடன் இருந்துவிட்டார். இச்சம்பவத்தைப் பார்த்ததும் எனக்குப் பயம் வந்தது. நான் பயத்தால் அவ்விடத்தில் இருந்து ஓடிவிட்டேன்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. ஆர். கண்ணுத்துரையால் சாட்சி குறுக்கு விசாரணைசெய்யப்பட்டபோது கந்தையா சாட்சியமளிக்கையில், எதிரிக்கு இரத்தக்காயம் எப்படி வந்தது என்று தனக்குத் தெரியாதென்றும், காலஞ்சென்றவர் எதிரியைக் கத்தியால் குத்தியதைத் தான் காணவில்லை என்றும், எதிரி காலஞ்சென்றவரை ஒரேஒருமுறைதான் தலையில் தாக்கினர் என்றும் அதன்பின் காலஞ்சென்றவரை தாக்க எதிரி எத்தனிக்கவில்லையென்றும் தான் மல்லாகம்நீதிமன்றத்தில் பலதடவை எதிரியாகக்குற்றம் சாட்டப்பட்டவர் என்றும் கூறினர்.

நீதிபதி மேல் விசாரணையை அடுத்தமாதம் 8ந்-திகதிக்கு ஒத்திவைத்தார்.

### கர்ப்பவதி திடீர் மரணம்

சாவகச்சேரி, வெள்ளி

கச்சாய் வாசியான தம்பிஐயா பெண் உருக்குமணி (வயது 17) என்பவர் தண்ணீர் அள்ளும் போது கால்தவறி கிணற்றுள் வீழ்ந்து மரணமானர். இப்பெண் கர்ப்பவதியாகி நாலு மாதங்கள் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கே. திரவியநாயகமும் சாவகச்சேரிப் பொலிசாரும்விசாரணைசெய்து, கிணற்றில் வீழ்ந்து மூச்சுத்திணறி மரணமானதாகத் தீர்ப்பளித்தார்.

### விவசாய திட்டங்களில் படித்த இளைஞர்களுக்கு முதலிடம்

கொழும்பு, வெள்ளி

விவசாயத் திட்டங்களுக்கு சேவையாளர்களை புதிதாக நியமிக்கும்போது, படித்த இளைஞர்களுக்கே முதலிடம் கொடுப்பதெனக் காணி விவசாய நீர்ப்பாசன அமைச்சு தீர்மானித்துள்ளது.

படித்த இளைஞர்களுக்கு விவசாயம் பற்றி ஓரளவு அடிப்படையான அறிவு இருந்தால் அவர்களுக்கு இந்த நியமனங்களில் முதலிடம் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட விவசாயக்கமிட்டிக் கூட்டங்களில் இந்தவிஷயம் பற்றி ஏற்கனவே ஆலோசிக்கப்பட்டுள்ளது. தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

காணிக்கச்சேரிகள் கூடும் போது படித்த இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படும் எனத் தெரிகிறது.

### ரஷ்யா செல்லும் எம். பி. க்கள்

கொழும்பு, வெள்ளி

ரஷ்யாவுக்கும், ஜெர்மன் குடியரசுக்கும் செல்லும் 16 எம். பி. க்கள் தூதுகோஷ்டியின் ஒரு பகுதி நேற்று ரஷ்யா புறப்பட்டது. சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்போல தலைமையில் இத்தூதுகோஷ்டி செல்கிறது.

இன்று புறப்படும் தூதுகோஷ்டியில் சபாநாயகர், திரு. ஆதமலி, உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் இருப்பார்கள்.

### 108 பெற்றோல் நிலையங்கள்

#### கார்ப்பரேஷன் பொறுப்பேற்கிறது

கொழும்பு, வெள்ளி

கொழும்பிலும் அதைச் சுற்றி 60 மைலுக்குள்ளும் இருக்கும் 108 ஷெல், கல்டெக்ஸ்எண்ணை நிலையங்களை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் உடனடியாகப் பொறுப்பேற்கும் இது சம்பந்தமாக இந்த நிலையங்களுக்கு அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

நாட்டிலுள்ள சகல நிலையங்களையும் எடுப்பதற்குப் பூர்வாங்கமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது. நாளை கொலன்னுவையிலுள்ள கார்ப்பரேஷன் நிலையத்தை பிரதமர் இயக்கிவைப்பார்.

## "நாவலரும், விபுலானந்தரும் நாட்டின் இரு கண்கள்"

### சைவாசிரியர்கள் மகாநாட்டில் தலைமை உரை

காத்தான்குடி, வெள்ளி

மட்டக்களப்பு மாவட்டச் சைவாசிரியர்களின் 2-ம் நாள் மகாநாடு ஆசிரியகலாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. மாலை நிகழ்ச்சிகளுக்குத் தமிழ் விரிவுரையாளர் பண்டித சே. பூபாலபிள்ளை தலைமை தாங்கினர். அவர் தம் தலைமையுரையில் கூறியதாவது:-

"ஈழநாட்டின் இரு கண்கள், போன்றவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும், உயர் திரு. விபுலானந்த அடிகளாருமாவர். இருவரும் சைவத்துக்கும், தமிழுக்குச் செய்த அளப்பரிய சேவையை நாம் மறக்கவோ மறுக்கவோ முடியாது. நம் வாழ்நாள் பூராவும் இவர்கள் சேவையை நினைவுகூரக் கடமைப்பட்டவர்களாவோம். விபுலானந்தர், நாவலர் அவர்களின் சரித்திரத்தை இளமைப்பருவத்தில் கற்ருர். அவரை அறியாமலே நாவலரவர்கள்மீது பிரிக்கமுடியாத பற்று ஏற்பட்டது. அவருடைய வாழ்வை அடியொற்றி வாழவேண்டுமென எண்ணினர். அதன்படி துறவுபூண்டு தமிழுக்கும், சைவத்துக்கும் தொண்டாற்றியது நாவலரிடத்து அவர்பூண்ட பேரன்பு காரணமெனலாம். இவ்விரு பெரியார்களும் போதனையில் மட்டுமல்ல சாதனையிலும் செயல்பட்டார்கள். சைவாசிரியர்களும் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ முயற்சிக்கவேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

திரு. ந. ரா. முருகவேள் பேசும்போது குறிப்பிட்டதாவது:-

"கலைஞன் ஒருவன் தான் படைக்கும் படைப்பின்மூலம் தனித் திறமையை வெளிக்காட்டுகிருன். ஆனல் அது கலையின் பூரண தோற்றமாகாது. அனுபவரீதியாகப் பயிற்றுபவனே உண்மை ஆசிரியனுவான். வெறும் நூலறிவுடன் மட்டும் நில்லாது நல்வாழ்வு வாழ்ந்துகாட்டவேண்டிய பொறுப்பும் ஆசிரியனுக்குண்டு. சிறந்த ஆசிரியனை அண்டிவாழும் மாணவன் உயர்ந்த பிரசையாகிருன். அன்றியும் ஒரு ஆசிரியன் தன்னை ஒரு மாணவனுகக் கருதி எப்போதும் படித்துக்கொண்டே இருக்கவேண்டும். ஆசிரியருக்கும் மாணவர்கட்குமிடையில் புனிதத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். சமய பாடத்தை ஒவ்வொரு ஆசிரியரும் புனித நோக்குடனேயே கற்பிக்கவேண்டும்" என்ருர்.

செயலாளர் த. செல்வநாயகத்தின் நன்றியுரையைத் தொடர்ந்து நடத்த கதம்ப நிகழ்ச்சியுடன் மகாநாடு நிறைவுற்றது.

### சிங்கள டெலிப்பிரிண்டர்கள்

கொழும்பு, வெள்ளி

சிங்கள 'டெலிப்பிரிண்டர்களை'த் தயாரிக்கும்படி இலங்கை அரசாங்கம் யப்பானிலுள்ள பிரபல கம்பனி ஒன்றினிடம் கேட்டுள்ளது. வெகுவிரைவில் அந்தக் கம்பனி சிங்கள 'டெலிப்பிரிண்டர்களை'த் தயாரித்து இங்கு அனுப்பிவைக்கும் எனத் தெரிகிறது.

சிங்கள டெலிப்பிரிண்டர்கள் இங்கு வந்துசேர்ந்ததும் சிங்கள மொழியில் தந்திகளை அனுப்பிவைப்பது வெகு சுலபமாகிவிடும். எனக் கூறப்படுகிறது.

### ஜயந்தி விழா

தெல்லிப்பழை, வெள்ளி

தமிழ்ப்புலவர் திரு. வ. மு. இரத்தினேஸ்வர ஐயரின் எண்பதாவது. ஜயந்தி விழா வருகிற வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படவிருக்கிறது. நியாயவாதி திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் இளைப்பாறிய உதவி வித்தியாதிபதி திரு. க. ச. அருள்நந்தி, பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை, முதலியார் முத்துத்தம்பி ஆகியோருட்பட்ட பலர் பாராட்டுரை வழங்குவர். புலவருக்கு வாழ்த்துப் பத்திரம் பாடிவழங்கப்படும்.

## மூன்றுநாள் நடைபெறும் வெள்ளி விழா

### வட்டுக்கோட்டை இளைஞர் உடலுள விருத்திச்சங்கம் ஏற்பாடு

வட்டுக்கோட்டை, வெள்ளி

வட்டுக்கோட்டை இளைஞர் உடலுள விருத்திச் சங்கத்தின் வெள்ளிவிழா, வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் கந்தசாமிகோயில் வீதி வெளி அரங்கில் இம்மாதம் 29ம், 30ம் தேதிகளிலும் மே 1ம் திகதியிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

முதல்நாள் நிகழ்ச்சிகள் வெள்ளிவிழாச் செயற்குழுத் தலைவர் திரு. க. கயிலாயநாதன் தலைமையில் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகின்றது. வட்டுக்கோட்டைகிராமசபைத் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி சங்கக்கொடியை ஏற்றிவைத்து வாழ்த்துரை வழங்குவார். வித்துவான் வேந்தனர், திரு. கி. வா. ஜெகந்நாதன், செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

இரண்டாம்நாள் நிகழ்ச்சிகளில் காலையில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். மாலை நிகழ்ச்சிகள் திரு. கி. வ. ஜெகந்நாதன் தலைமையில்நடைபெறும். இசை நிகழ்ச்சிகளில் பல கலைஞர்கள் பங்குபற்றுகிருர்கள்.

மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் சங்கத் தலைவர் திரு. க. செல்வராசா தலைமையில் நடைபெறுகிறது. சங்கீத கதாப்பிரசங்கம், விரிவுரைகள், பரிசு வழங்கல் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

## உணவுப்பொருள் சட்டத்தை அமுலாக்கும் ஸ்தலஸ்தாபனங்கள்

### இருபத்திரண்டு மட்டுமே

கொழும்பு, வெள்ளி

உணவுப் பொருள் மருந்துப் பொருள் சட்டத்தின் விதிகளை 18 நகரசபைகளும் 4 பட்டின சபைகளுமே மேற்கொண்டு அவற்றின் படி ஒழுகி வருகின்றன.

ஸ்தலஸ்தாபனப்பகுதி உதவிக் கமிஷனர் ஸ்தலஸ்தாபன இலாகாவுக்குச் சமர்ப்பித்த அறிக்கை களிலிருந்து இந்த விவரம்தெரிய வந்துள்ளது.

உணவுப் பொருள், மருந்துப் பொருள் சட்ட விதிகளை எத்தனை ஸ்தலஸ்தாபன சபைகள் அமுல் செய்து வருகின்றன என்றுஸ்தலஸ்தாபன இலாகா உதவிக் கமிஷனர்களுக்கு விடுத்த உத்தரவென்றின் பேரில், உதவிக் கமிஷனர்கள் இந்த அறிக்கைகளைத் தயாரித்தார்கள்.

மாநகர சபைகள் ஐந்து இந்தச் சட்டவிதிகளை அமுல் செய்து வருகின்றன.

இவ்வருடத்திலேயே தத்தம் பகுதிகளில் இந்த விதிகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு, ஸ்தலஸ்தாபன சபைகள் பல நிருவாக நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது.

உணவுப் பொருள் மருந்துப் பொருள் சட்டம் இலங்கையின் பல பாகங்களிலும் அமுலாகும் வகை செய்ய வேண்டும். எனச் சுகாதார இலாகா ஸ்தலஸ்தாபன இலாகாவைச் சமீபத்தில் கேட்டுள்ளது.

### மரத்திலிருந்து விழுந்து மரணம்

பண்டாரகம, வெள்ளி

பண்டாரகமவைச் சேர்ந்த கே. பபுசிங்கோ என்பவர் கித்துன் மரத்திலிருப்து விழுந்து மரணமானர்.

### 15 லட்சம் சிறுவருக்கு தடுப்பு மருந்து

கொழும்பு, வெள்ளி

இன்னும் 6 மாத காலத்தில் 15 லட்சம் சிறுவருக்கு தடுப்பு மருந்து கொடுப்பதற்கான சுகாதாரப் பகுதியின் திட்டம் ஒன்று வெளியாகியிருக்கிறது.

### பெட்டிக்குள் வைக்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பெட்டி கொண்டு வரும்படியும் கூறி, பொலிஸாருக்கும் பின்னர் முறையிட்டார்.

சிறிது நேரத்திற்குப் பின்னர், அந்தச் சடலம் பிரேதப் பெட்டிக்குள் வைத்து புதைக்கப்பட்டது.

மிகத் திறமையான

பவர்ஸ்

உரங்கள்

கிருமி நாஸ்தினி தெளிக்கும் யந்திரங்களும்

லாபகரமாய் பயிரிட

- புகையிலை
- வெண்காயம்
- மிளகாய்
- மரக்கறி
- நெல்
- வாழை

மற்றும் பழவகைகளும்

கிடைக்குமிடம்

ஏ. பவர்

அன் கொம்பனி லிமிட்டெட்,

த. பெ. 11, கொழும்பு.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

சனி 28-4-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 நாகஸ்வரம், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 முத்துலட்சுமி கைலாசநாதன் - பாட்டு.

இரவு 7-15 கண்டதும் கேட்டதும் - செய்திச்சுருள், 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்தியக் கோஷ்டி, 9-30 ஏ. எஸ். நாராயணன் - பாட்டு, 10-15 நாட்டிய இசை.

ஞாயிறு 29-4-62

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்விக்கநற்சிந்தனை. 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 குரல்வகை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 9-00 இஸ்லாமிய சமயப்பாடசாலை, 9-30 கதம்ப இசை, 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்பகுதி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 சோ. க. தம்பிப்பிள்ளை - பேச்சு, 6-10 வாத்திய இசை, 6-15 கூட்டுப் பிரார்த்தனை அஞ்சல்.

இரவு 7-15 ஜப்பான் தேசியதின நிகழ்ச்சி, 7-30 அல்வின் தேவசகாயம் - பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 'கருட சஞ்சீவி' -நாடகம், 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)]

சனி 28-4-62

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 திருவீழிமிழலை என். சுப்பிரமணிய பிள்ளை - வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-50 குரல் இசை, 2-10 திருவீழிமிழலை என். சுப்பிரமணிய பிள்ளை - வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 8-15 திரைப்பட இசை, 8-40 இசைமாலை, 9-30 அகில பாரத சங்கீதநிகழ்ச்சி.

ஞாயிறு 29-4-62

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-30 திருநெல்வேலி மீனாட்சி லட்சுமி,-பாட்டு 8-15 பி. எஸ். நாராணஸ்வாமி- பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி - கதம்பநிகழ்ச்சி, 1-00 மணி மலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 கே. ஆர். லட்சுமி - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 தஞ்சாவூர் எல். வேங்கடேசன் பாட்டு, 8-30 திருநெல்வேலி மீனாட்சி - லட்சுமி பாட்டு, 9-15 அப்பர் தேவாரம், 9-45 ஆகாசவாணி ஒலிப்பதிவுகள்.

## திரு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நாளை நவாலியூர் சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் 5-ந் திருவிழா நடைபெறும்.

## இ. போ. சபையின் புதிய உயர் அதிகாரிகள்

### சம்பளம் வெட்டப்படும்

கொழும்பு, வெள்ளி

சபையின் உயர்தர நிர்வாக பதவிகளுக்கு இனிமேல் சேர்க்கப்படும் அதிகாரிகள் எல்லோரினதும் சம்பளத்தில் வெட்டுவதென்று இலங்கைப் போக்குவரத்துச் சபை முடிவு செய்துள்ளது. திறைசேரியின் சிபார்சின் பேரிலேயே சபை இந்த முடிவுக்கு வந்துள்ளது.

இலாகாத் தலைவர் பதவியைச் சேர்ந்தவர்களுக்கு மாதாந்தம் ரூ. 1,750 முதல் ரூ. 2,500 வரை வழங்கப்பட்டு வருகிறதென்றும் இனிமேல் ரூ. 1,500 முதல் ரூ. 2000 வரை வழங்கப்படுமென்றும் தெரிகிறது. இதுபோல், முதல் கிரேட் அதிகாரிகளுக்கு ரூ 1,250 முதல் ரூ. 1750 வரை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் மாதச் சம்பளம் ரூ. 1,000 முதல் ரூ. 1,500 வரை வழங்கப்படும்.

## மாணவியின் பரிதாப மரணம்

கொழும்பு, வெள்ளி

கொலங்கடியா என்ற இடத்தைச் சேர்ந்த பதின்மூன்று வயதுள்ள பாடசாலை மாணவி வர்னகுலசூரியா பியட்றிஸ் என்பவரின் தலைமீது தேங்காய் ஒன்று விழுந்து சிறிது நேரத்தில் மரணமானார்.

## ஆசிரியர்களுக்கு அடையாள கார்டு

கொழும்பு, வெள்ளி

ஆசிரியர்கள் அத்தாட்சிப் பத்திரத்தில் இணைக்கப்பட்டிருக்கும் புகைப்படங்கள், சரியான அடையாளம் காட்டாத சமயத்தில் தபால் இலாகாவினால் விநியோகிக்கப்படும் அடையாளக் கார்டுகள் மூலம் நிரூபிக்கலாம் என்றும், கல்வி டைரக்டர் ஆசிரியர்கள் எல்லோருக்கும் ஆலோசனை கூறியுள்ளார்.

ஆசிரியர்களின் சம்பளத்தில் நடைபெறும் மோசடியை தீர்க்க இது ஓர் நல்ல நடவடிக்கை எனக் கூறப்படுகிறது.

## 2000 கவிப் டிக்கட்டுகள் காணவில்லை

அநுராதபுரம், வெள்ளி

அநுராதபுரத்திலுள்ள ஒரு ஸ்டோருக்கு புகையிரத மார்க்கமாக அனுப்பி வைக்கப்பட்ட இரண்டாயிரம் தேசிய ஆஸ்பத்திரி சுவீப் டிக்கட்டுகள் காணமல் போய்விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அநுராதபுரம் புகையிரத அதிகாரியொருவர் இதுபற்றித் தெரிவிக்கையில், டிக்கட்டுகள் தங்களுக்குக் கிடைத்ததென்றும், ஆனல் ஏஜண்டுகளுக்குக் கொடுபடவில்லை என்றும் கூறினர்.

இது சம்பந்தமாக விசாரணை நடைபெற்று வருகிறது.




# பலாத்காரம் மூலம் சமூக சீர்திருத்தம் செய்ய முடியாது

உடுப்பிட்டி, வெள்ளி

இன்று காலை பத்து மணியளவில் வடமராட்சிப் பகுதிகளில் சிறுபான்மைத் தமிழர் தேநீர் கடைகளுள் செல்ல அனுமதியளிப்பதற்காக உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், பருத்தித்துறை பட்டின சபைத் தலைவர் திரு. என். நடராசா, சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம்.சி. சுப்பிரமணியம் சமசமாஜ, கம்யூனிஸ்ட் அனுதாபிகள் பலரும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் கூடினர். ஆனால் கடைகளை இன்று திறப்பதாக, சுதந்திரத் தமிழர் இயக்கத்தினருக்கு ஏற்கனவே வாக்குறுதி கொடுத்த தேநீர்க்கடைமுதலாளிகள் உட்பட நெல்லியடியிலுள்ள சகல கடைகளும் இன்று திறக்கப்படவில்லை.

முன்னேடியாக நெல்லியடியிலுள்ள தேநீர்க்கடைகளைத் திறந்தபின் வடமராட்சியிலுள்ள இதர கடைகளுக்குச் செல்லவிருந்த இயக்கத்தினர் தமது முயற்சியைக் கைவிட வேண்டி நேரிட்டது. கூட்ட முடிவில் திரு. எம். சி. சுப்பிரமணியம் கூறியதாவது."பலாத்காரத்தின் மூலம் இவ்வாறான சமூக சீர்திருத்தங்கள் செய்ய முடியாது. பொதுசன அபிப்பிராயம் இவ்வித மாற்றங்களுக்குச் சாதகமாக மாறவேண்டும். அரசாங்கம் ஏற்கனவே நிறைவேற்றியுள்ள சமூகக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை அமுல் நடத்தவேண்டியது அவசியம்"

இம் முயற்சியைத் தொடர்ந்து நடத்த தாம் தீர்மானித்திருப்பதாக 'சுதந்திரத் தமிழர் இயக்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

## கார் மோதி பெண் மரணம்

கொழும்பு, வெள்ளி

தெல்வத்தையில் கொழும்பு-காலி வீதியில் கர்லினஹாமி என்ற ஒரு பெண் மோட்டார் கார் ஒன்றினல் மோதப்பட்டு இறந்துகிடக்கக் காணப்பட்டார். காரும் சாரதியும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர்.

## அவிசாவளையில் குறைந்த வாடகை வீடுகள்

### நகரசபையின் திட்டம்

அவிசாவளை, வெள்ளி

குறைந்த வாடகையில் மக்கள் வசிக்கக்கூடிய 38 வீடுகளைக் கட்ட அவிசாவளை நகரசபை தீர்மானித்துள்ளது.

இதற்கு ரூ. ஒரு லட்சத்து 4ஆயிரம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

## நெல்லியடியில் கி.வா.ஜ. சொற்பொழிவு

உடுப்பிட்டி, வெள்ளி

பிரபல இந்திய எழுத்தாளரும் கலைமகள் ஆசிரியருமான திரு. கி. வா. ஜகந்நாதன் எதிர்வரும் செவ்வாய் மாலை 6மணியளவில்,நெல்லியடிமுருகமூர்த்தி கோவிலில் "தமிழ்த் தேன்" என்னும் விஷயம்பற்றி சொற்பொழிவாற்றுவார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம் சிவசிதம்பரம் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவார்.

## இலங்கையர்களுக்கு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான திரு. பிலிப்குணவர்த்தன யோசனை கூறினர்.

திரு. பீலிக்ஸ் (இடையில் குறுக்கிட்டு) 'கோரம்' சோவியத் யூனியனில் இருக்கிறது.

திரு. தஹநாயக்கா (தமாஷாக) அரசாங்கக் கட்சியில் ஏழுபேர் தானுள்ளனர். எதிர்க் கட்சியில் பத்துப்பேர் இருக்கின்றனர். அரசாங்கம் தோல்வியடைந்து விட்டது.

ஐந்து நிமிஷங்களின் பின் மீண்டும் அங்கத்தவர்களை அழைக்கும் மணியடிக்கப்பட்டது. அதன் பின்னரும் சபையில் 'கோரம்' இல்லாததால், சபைக் கூட்டத்தை மே மாதம் 8-ந் திகதி பிற்பகல் 2 மணிவரை உதவி சபாநாயகர் ஒத்திவைத்தார்.

## சிங்களம்படிக்கும்படி..

(1-ம் பக்க தொடர்ச்சி)

வித்தியா பகுதிக் கூட்டுச்சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு ஆசிரிய தொழிற்சங்கங்களின் சம்மதத்துடன் நடைமுறைக்கு வருதல் வேண்டும். எந்த அரசியற் கட்சியிலுஞ் சேராத அரசினர் ஆசிரியர்களின் மாற்றம் உயர்ச்சி விஷயத்தில் அரசியல் வாதிகள் தலையிடு இல்லாதிருக்க வித்தியாதிபதி ஆவன செய்யவேண்டும்.

பாராளுமன்றத் தொகுதியடிப்படையில் ஜனநாயகத்துக்கு மாறாக நடைபெறும் தமிழ் ஆசிரிய மாற்றம், உயர்ச்சி நடைபெறுவது தவிர்க்க வேண்டும்.

ஆசிரியர்களின் மாற்றச் சபை உத்தியோகத்தர்கள் குறைந்தது இரண்டு வருடத்துக்கு ஒருமுறை அப்பகுதியை விட்டு வேறுபிரிவுக்கு மாற்றப்படுவதில் நியாயம் உண்டென இச்சபை கருதுகிறது. ஆகவே நீண்டகாலச் சேவையுள்ளவர்கள் உடனடியாக மாற்றப்பட வேண்டும்.

தமிழ் ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சைவிஷயத்தில் பிற்போக்கு இடங்கள், சிறுபான்மைச் சலுகை முற்றிலும் அநீதியானது. எனவே அப்படிக்கொடுப்பதை பாராளுமன்ற உறுப்பினரிடமோ கட்சியின் உறுப்பினரிடமோகொடுக்காது வித்தியாதிபதியே தெரிவு செய்யவேண்டும்.

## தமிழ் எழுத்தாளர் மகாநாடு

கொழும்பு, வெள்ளி

இலங்கை முற்போக்குஎழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில் இலங்கை தமிழ் எழுத்தாளர் இரண்டுநாள் மகாநாடு நாளை சனிக்கிழமை கொழும்பு சாகிராக்கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகின்றது. இந்தமகாநாட்டில் சிங்கள எழுத்தாளர்கள் சிலரும் சகோதர எழுத்தாளர்களாகக் கலந்துகொள்வர்.

## மரண அறிவித்தல்

வேலணை கிழக்கைச் சேர்ந்த சண்முகரத்தினம் (கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை ராணி சினிமா) அமிர்தலிங்கம் (நாவலர் பாடசாலை) ஆசிரியர்களதும், சீவரத்தினம், மகேஸ்வரி, திருமதி மார்க்கண்டு நாகபூரணம் ஆகியயோர்களது அருமைத் தந்தையாரும் சின்னத்தங்கம் என்பவரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற குத்தகைக்காரர் திரு. வே. பேரம்பலம் என்பவரின் மைத்துனருமாகிய திரு சின்னத்தம்பி சோமசுந்தரம் அவர்கள் 27-ந்திகதிவெள்ளிக்கிழமை இரவு காலஞ்சென்றுவிட்டார். அன்னரது பூதவுடல்29. ந்திகதி ஞாயிறுக்கிழமை பகல் 8 மணியளவில் தகனக் கிரியைக்காக வேலணை கிழக்கு பொதுமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தயவுசெய்து அன்பர்கள் உறவினர்கள்யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

சோ. சண்முகரத்தினம

இலட்சுமி வாசா,

வேலணை கிழக்கு.

# தமிழ் நாடு பெயர் மாற்ற திருத்தப் பிரேரணை தோல்வி

சென்னை ஏப். 27

சென்னை ராஜ்யம் என்ற பெயரை 'தமிழ்நாடு' என்று சகல மொழிகளிலும் மாற்றி அமைக்க வேண்டுமென்று தமிழ்நாடு சட்ட சபையில், கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு கம்யூனிஸ்ட் அங்கத்தவர் திரு. எம். கலியாண சுந்தரம் கொண்டுவந்த திருத்தபிரேரணை நிராகரிக்கப்பட்டது.

இப்பிரேரணைக்கு ஆதரவாக 53 அங்கத்தவர்களும் எதிர்த்து 113 அங்கத்தவர்களும் வாக்களித்தனர் 3சுயேச்சை அங்கத்தவர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் 'தமிழ் நாடு' சட்டசபையில் (கீழ் சபை) இன்று நிறைவேறியது. எதிர்க் கட்சியினர் கொண்டு வந்த திருத்தப் பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டன.

## கோடரியால் வெட்டி கொலை

நாவலப்பிட்டி வெள்ளி,

நாவலப்பிட்டியில் கடியலேன பாறையைச் சேர்ந்த பழனியாண்டிஎன்பவர் கோடரியால் வெட்டிக் கொல்லப்பட்டார். குடும்பத் தகராறு காரணமாக எழுந்த ஒரு சச்சரவினல் பழனியாண்டி அவரது ஆசைநாயகி பழனியம்மாவினல் வெட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## பாக். அரசியல் சட்டத்தை திருத்தவேண்டும்

— அயூப் சகோதரர்

கராச்சி, ஏப்ரல் 27

பாகிஸ்தானின் அரசியல் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென ஜனதிபதி அயூப்கானின் சகோதரர் பகதூர் கான் வற்புறுத்தியிருக்கிறர்.


29 - 4 - 62

'ஈழநாடு' ஞாயிறு இதழில்

★ "கடமை கடமை" (சிறுகதை)
கச்சாயில் இரத்தினம்

★ மே தினம் (கட்டுரை)
கே. ஐ. நாகராசன்

★ மறதியை மடக்கும் மந்திரம்
க. சதானந்தன்

★ உலக மேடை
டி. எம். எம்.

கலை அரங்கம், நாடுநலம்பெற...,
சிறுவர் பூங்கா, மகளிர் மன்றம்

மற்றும் பல சுவையான அம்சங்கள்.

பக்கங்கள் 12 விலைசதம் 15



வடமாகாண கிரிக்கெட் வீரர் 1962

'விக்னராஜா' பரிசுக் கிண்ணத்துக்காக 'ஈழநாடு' நடாத்தும் தெரிவு.

1962-ம் ஆண்டின் வடமாகாண கிரிக்கெட் வீரராகப் பின்வருபவரை நான் தெரிவு செய்கின்றேன்.

கிரிக்கெட் வீரர் ..........

கல்லூரி ..........

எனது பெயர் ..........

விலாசம் ..........

இக்கூப்பனைக் கத்தரித்து 'கிரிக்கெட் வீரர் 1962', C/o. 'ஈழநாடு', தபாற்பெட்டி எண் : 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அனுப்புக.



2வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)
ஸ்ரீ கிருஷ்ண (திருக்கோணமலை) மொடர்ன் (பதுளை) லக்ஷ்மி (ரத்தினபுரி)
விஜிதா (மஸ்கெலியா) தீவொளி (நுவரெலியா) ஜெமினி (ராகலை)
நியூசினிமா (குருணகலை)

- இலட்சியங்கள் தான் மனித வாழ்வில் நிலைத்து நிற்கின்றன, என்ற அடிப்படையிலே உருவாகி....
- இன்ப வாழ்வுக்கு, இதய நிறைவுக்கு காதலே ஆதாரம் என்று ஒளி காட்டி....
- ஒன்றுபட்ட இல்லறத்திலேதான் உள்ள அமைதி பிறக்கும் என்பதை நிலை நிறுத்தி....
- பிரிவிலே ஏற்படுகின்ற வேதனை மிகமிகப் பொல்லாதது என்று எடுத்துக் காட்டி....
- இன்பக் காட்சிகளும், இனிய பாடல்களும் இணைந்த காதல் காவியமாக, உங்கள் இதயத்தைக்கொள்ளைகொள்ள வந்திருக்கிறது....



சிவாஜி கணேசன்-சரோஜாதேவி
எம். ஆர். ராதா - சௌகார் ஜானகி
நடித்த
பாலும் பழமும்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
ரஞ்சன் — ராஜசுலோசன
நடித்த
ராஜா மலயசிம்மன்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது